வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

ஈழநாடு

Eelanadu




Email : eelanaduweekly@gmail.com | மலர் : 06 | 09.04.2025 புதன்கிழமை | இதழ் : 100 | பக்கங்கள் : 12

# பயங்கரவாத தடை சட்டத்தை பயன்படுத்தும் நிலை உள்ளது!

**அரசாங்கம் அறிவிப்பு**

கொழும்பு, ஏப்ரல் 09

**விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை பயன்படுத்த வேண்டிய நிலைமையே தற்போது காணப்படுகிறது - இவ்வாறு அமைச்சரவை பேச்சாளரும் அமைச்சருமான நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.**

நேற்று செவ்வாய்க்கிழமை நடந்த அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

மேலும், பயங்கரவாதத் தடை சட்டம் நீக்கப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டில் நாம் உறுதியாக உள்ளோம். எவ்வாறிருப்பினும்,



தற்போது சில குற்றச் செயல்கள் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுப்பதற்காக வேறு சட்டமொன்று நாட்டில் இல்லை.

திட்டமிட்ட குற்றச் செயல்கள் தொடர்பான விசாரணைகளின்போது சந்தேகநபர்கள் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் தடுத்துவைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்படவேண்டும் என்பதே தற்போது நடை முறையில்

11

# பிள்ளையான் கைது!

மட்டக்களப்பு, ஏப். 09

முன்னாள் இராஜாங்க அமைச்சரான பிள்ளையான் என்று அறியப்பட்ட சிவநேசதுரை சந்திரகாந்தன் நேற்று செவ்வாய்க்கிழமை கைது செய்யப்பட்டார்.

மட்டக்களப்பிலுள்ள தமிழ் மக்கள் விடுதலை புலிகள் கட்சியின் தலைமையகத்தில் வைத்து நேற்று செவ்வாய்க்கிழமை மாலை அவர் கைது செய்யப்பட்டார்.

கொழும்பிலிருந்து சென்ற குற்றப் புலனாய்வு திணைக்கள அதிகாரிகளால் அவர் கைதுசெய்யப்பட்டார். அவரின் கைதுக்கான காரணம் தெரிவிக்கப்படவில்லை.(ஐ)

தென்னக்கோனுக்கு எதிரான பிரேரணை:

# எதிர்ப்பின்றி ஏகமனதாக சபையில் நிறைவேறியது

கொழும்பு, ஏப். 09

பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோனை பதவியிலிருந்து நீக்குவதற்கான விசாரணைக் குழுவை நியமிக்கும் பிரேரணை நேற்று பாராளுமன்றத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

தவறான நடத்தை மற்றும் கடுமையான பதவி துஷ்பிரயோகம் காரணமாக அவரை

11

# வடக்கு, கிழக்கு அபிவிருத்திக்கு ஆசிய அபிவிருத்தி வங்கி ஆதரவு!

யாழ்ப்பாணம், ஏப். 09

வடக்கு, கிழக்கு தொடர்பில் கூடுதல் கவனம் செலுத்துமாறு ஜனாதிபதி கேட்டதற்கிணங்க, ஆசிய அபிவிருத்தி வங்கியின் திட்டங்கள் மாகாணங்களில் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படும் என்று வடக்கு மாகாண ஆளுநரிடம் ஆசிய அபிவிருத்தி வங்கியின் பிரதிநிதிகள் குழு தெரிவித்துள்ளது.

வடக்குக்கு வந்துள்ள ஆசிய அபிவிருத்தி வங்கியின் குழுவினர் நேற்றைய தினம் ஆளுநர் நா. வேதநாயகனை சந்தித்தனர்.

இந்த சந்திப்பில்,

"வடக்கு மாகாணத்தின் குறிப்பாக, யாழ்ப்பாண மாவட்டத்தின் குடி தண்ணீர் தேவையை பூர்த்தி செய்வதற்கு கூடுதல் கவனம் செலுத்தப்பட வேண்டும். இதற்காக ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி உதவியில்

11

# 30 ஆயிரம் பேரை அரச சேவையில் இணைக்க அமைச்சரவை அனுமதி

கொழும்பு, ஏப். 09

2025 வரவு - செலவு திட்டத்தின் பிரகாரம் 30 ஆயிரம் வேலையற்ற பட்டதாரிகள் மற்றும் இளைஞர், யுவதிகளை அரச சேவையில் இணைப்பதற்கு அமைச்சரவை தீர்மானித்துள்ளது என்று அதன் பேச்சாளரும் அமைச்சருமான நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

இந்த ஆட்சேர்ப்புகள் நியமமான ஆட்சேர்ப்பு நடைமுறைகளுக்கு ஏற்ப விண்ணப்பங்கள் கோரப்பட்டு அரசியல் அழுத்தங்களின்றி, தகைமை மற்றும் திறமைகளின் அடிப்படையில் நடைபெறும் என்றும் அவர் கூறினார்.

அரச சேவையில் பல்வேறு நிறுவனங்களின் பணிக்குழுவை மீண்டும் மீளாய்வு செய்து அத்தியாவசிய ஆட்சேர்ப்புகளை மேற்கொள்வதற்காக

11




இந்தியா, சீனா முதலீடுகள்:

# மக்கள் எதில் கூடுதல் நன்மை அடைந்தனர் என்பதே முக்கியம்!

இந்தியாவில் நாமல் தெரிவிப்பு

புதுடில்லி, ஏப். 09

இலங்கையில் இந்தியா, சீனா மேற்கொண்டுள்ள முதலீடுகளை பொறுத்தவரையில், இதனை எந்த நாடு முதலீடு செய்கிறது என்ற கோணத்தில் அணுகுவதை விடுத்து எந்த முதலீட்டால் இலங்கை மக்கள் பெரிதும் பயனடைவர் என்ற கோணத்திலேயே அணுக வேண்டும் - இவ்வாறு கூறியுள்ளார் சிறி லங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ.

இந்தியாவில் "ரைஸிங் பாரதம்" மாநாட்டில்

11

வடக்கு, கிழக்கு தமிழர்களை அழித்த

# ராஜபக்ஷக்களுக்கு ஒத்துழைத்தவரின் குற்றச்சாட்டுகள் அடிப்படையற்றவை

**சாணக்கியனுக்கு பிமல் இப்படி பதில்**

கொழும்பு, ஏப். 09

2005ஆம் ஆண்டு ரணில் - சந்திரிகாவை தோற்கடிப்பதற்காகவே ராஜபக்ஷர்களுக்கு ஆதரவளித்தோம். வடக்கு, கிழக்கு மக்களை அழித்த ராஜபக்ஷர்களுக்கும் பிள்ளையானுக்கும் ஒத்துழைப்பு வழங்கியவர்கள் முன்வைக்கும் குற்றச்சாட்டுகள் அடிப்படையற்றவை என சபை முதல்வரும் அமைச்சருமான பிமல் ரத்நாயக்க குறிப்பிட்டார்.

பாராளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்ற முறையற்ற வகையில் ஈட்டப்பட்ட சொத்துகள் தொடர்பான சட்ட மூலம் மீதான விவாதத்தில் உரையாற்றிய

11

# துப்பாக்கிச்சூடு: நேற்றும் ஒருவர் உயிரிழந்தார்!

கொழும்பு, ஏப். 09

தென்னிலங்கையில் நேற்று இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டில் ஒருவர் உயிரிழந்தார்

கம்பஹா - சீதுவையில் இடம்பெற்ற இந்தத் துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்தில், அதே இடத்தைச் சேர்ந்த 51 வயது நபர் ஒருவரே உயிரிழந்தார்.

11

# பஸில் ராஜபக்ஷ நாடு திரும்புகிறார்!

கொழும்பு, ஏப். 08

உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலைத் தொடர்ந்து சிறீ லங்கா பொதுஜன பெரமுனவில் மாற்றங்களை செய்தவற்காக அந்தக் கட்சியின் நிறுவுநரான பஸில் ராஜபக்ஷ ஜூன் மாதம் இலங்கை திரும்பவுள்ளார் என்று கூறப்படுகிறது.

அவரின் வருகையை அடுத்து, சிறீலங்கா

11

# புதுவருடத்தின் பின்னர் ஏ.எல். பரீட்சை பெறுபேறு!

கொழும்பு, ஏப். 09

க. பொ. த. உயர்தர பரீட்சை பெறுபேறுகள் தமிழ் - சிங்கள புதுவருடத்தின் பின்னர் வெளியிடப்படும் என்று பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

உயர்தர பரீட்சை பெறுபேறுகள் வெளியீடு தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மடு - மன்னார் இடையே கிராமங்களை இணைத்து

# பொது போக்குவரத்து சேவையை ஆரம்பிக்குமாறு கோரிக்கை

மன்னார், ஏப். 09

மடு - மன்னார் இடையே இரு வழி பொதுப் போக்குவரத்து சேவை நடத்தப்பட வேண்டும். இதன் மூலமாக மாணவர்கள், கர்ப்பவதிகள், முதியவர்கள், நோயாளர்கள் என பல ஆயிரக்கணக்கானவர்களுக்கு நன்மை கிடைக்கும் என்று கிராம அமைப்புகளின் பிரதிநிதிகள் கூட்டாகக் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பில் அவர்கள் நடத்திய ஊடக சந்திப்பில் தெரிவிக்கப்பட்டவை வருமாறு,

மடு பிரதேசம் பிரசித்தி பெற்றதாக இருக்கின்றபோதிலும் அதன் எல்லைப்புற கிராம மக்கள் மன்னார் நகருக்கு நேரடியாக போக்குவரத்து வசதியின்றி பெரும் இன்னல்களை எதிர்நோக்குகின்றனர்.


அரச நிர்வாக சேவையைப் பெறுவது, கல்வி, உயர்கல்வி மற்றும் சுகாதாரம் மருத்துவ தேவைகளுக்கும், தமது உணவு, வாழ்வாதாரம் தொழில், வியாபாரம் மற்றும் உள்ளூர் விவசாய உற்பத்திகளை சந்தைப்படுத்தல் போன்ற தேவைகளுக்காக வாடகை வாகனங்களுக்கு அதிக பணம் செலுத்தியும், பல கிலோமீற்றர்கள் நடந்தும் நேரத்தை வீணாக்கவேண்டிருப்பதுடன் பெரும் துன்பங்களுக்கும் உள்ளாகின்றனர்.

மடு வலயத்தில் மாணவர்கள் அதிகளவில் இடைவிலகவும் உயர் கல்வியை தொடர முடியாது கைவிடவும் போக்குவரத்து பிரச்னையும் முக்கியமானது. எனவே, இந்தப் பிரச்னைக்கு தீர்வாக சின்ன வலயன் கட்டில் இருந்து பரசன் குளம், விளாத்திகுளம், மண்கிண்டி, காக்கையன்குளம் மேற்கு மற்றும் கிழக்கு, கல்மடு, கல்மடு - 3, மதீனா நகர், இரணையிலுப்பைக்குளம் சந்தி, கங்காணிகுளம், முள்ளிக்குளம், கீரிசுட்டான். பாலம்பிட்டி, தட்சணா மருதமடு, பண்டி விரிச்சான், மடு, மடுச்சந்தி ஊடாக மன்னார் நகருக்கான நேரடி இருவழி பொதுப் போக்குவரத்து சேவையை ஆரம்பிக்க வேண்டும்.

இதேபோன்று, விடத்தல் தீவு, பள்ளமடு, பாலம்பிட்டி, இரணையிலுப்பைக்குளம் சந்தி ஊடாக வவுனியாவுக்கு இரு வழி பொதுப் போக்குவரத்து சேவையும் ஆரம்பிக்க வேண்டும்.

இந்த சேவைகளை ஆரம்பிப்பதன் மூலம் 50 பாடசாலைகளை சேர்ந்த சுமார் 2 ஆயிரத்து 500 வரையான மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள், அரச, அரச சார்பற்ற, தனியார் நிறுவன பணியாளர்கள் என பல ஆயிரம் பேர் பயனடைய முடியும்.

இதேவேளை, மடுவை சேர்ந்த 85 கிராமங்களில் வசிக்கும் சுமார் 4 ஆயிரத்து 500 குடும்பங்களும் நன்மையடைவதுடன், கர்ப்பவதி தாய்மார், முதியோர், நோயாளிகள், விசேட தேவையுடையோரும் நன்மை அடைவார்கள் - என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)



## அனுமதி பெறாது மாடுகளை கொண்டு சென்ற மூவர் கைது

வவுனியா, ஏப். 09

அனுமதிப்பத்திரமின்றி 20 மாடுகளை ஏற்றிச்சென்ற மூவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

நேற்று அதிகாலை வவுனியா பூவரசங்குளம் சந்தியில் பொலிஸார் கடமையில் ஈடுபட்டிருந்தபோது லொறி ஒன்றை மறித்து சோதனையிட்டனர்.

இதன்போது, அனுமதிப் பத்திரம் எதுவுமின்றி 20 மாடுகள் அந்த லொறியில் கொண்டு செல்லப்பட்டமை தெரிய வந்தது. இதையடுத்து வாகனத்திலிருந்த மூவரும் கைது செய்யப்பட்டனர்.

அத்துடன், மாடுகளும் வாகனத்துடன் பொலிஸ் நிலையத்துக்கு கொண்டு செல்லப்பட்டன. இந்த மாடுகள் முல்லைத்தீவு - மல்லாவியிலிருந்து குருநாகலுக்குக் கொண்டு செல்லப்பட்டன என்றும் விசாரணைகளில் தெரியவந்தது. (ஐ-10)





உரும்பிராய் கிட்ஸ் பார்க் முன்பள்ளியின் மழலைகள் பூங்கா விளையாட்டு விழா யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் முன்னாள் அதிபர் ஏ. பஞ்சலிங்கம் தலைமையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் முன்னாள் நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலய அதிபர் ம. கஜேந்திரன் பிரதம விருந்தினராக கலந்து கொண்டிருந்தார். (ஐ)


## இணுவில் பொதுநூலகத்தில் இரத்த தான முகாம் நடந்தது

யாழ்ப்பாணம், ஏப். 09

இணுவில் பொதுநூலகம், சனசமூக நிலையத்தின் 23 ஆவது புனருத்தாரண ஆண்டு நிறைவை முன்னிட்டு இரத்த தான முகாம் நூலகத்தின் கலாசார மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த இரத்ததான முகாம் நிகழ்வில் இணுவில் பொது நூலகம், சனசமூக நிலையத்தின் அங்கத்தவர்கள், கிராமத்தவர்கள் என 20இற் கும் மேற்பட்டோர் குருதிக் கொடை வழங்கினர்.

அண்மையில் நடந்த இந்த முகாமில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் இரத்த வங்கி பிரிவினர் குருதி சேகரிப்பில் ஈடுபட்டனர். (ஐ)



## போதைப்பொருட்களுடன் ஒருவர் உடுத்துறையில் கைது!

வடமராட்சி, ஏப். 09

வடமராட்சி கிழக்கு உடுத்துறையில் போதைப்பொருட்களுடன் நேற்று செவ்வாய்க் கிழமை அதிகாலை ஒருவரை தாம் கைது செய்துள்ளனர் என்று கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

வெற்றிலைக்கேணி கடற்படையினருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையிலேயே சந்தேகநபர் கைது செய்யப்பட்டார்.

சந்தேகநபரிடமிருந்து 8 உரப் பைகளில் ஈர நிலையில் கஞ்சா போதைப்பொருளை கைப்பற்றினர். கைதான சந்தேக நபர் சான்று பொருளுடன் மருதங்கேணி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

கைதான நபர் ஏற்கனவே போதைப் பொருள் கடத்தல் தொடர்பில் சிறைவாசம் அனுபவித்து விடுதலையானவர் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

## நூல் அறிமுக நிகழ்வு

யாழ்ப்பாணம், ஏப். 09

ஊடகக் கற்கைகள் துறையின் ஊடக கழகம் நடத்தும் 'உங்களை வெளிப்படுத்துங்கள்' நூல் அறிமுக நிகழ்வு இன்று புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ். பல்கலைக்கழக, கலைப் பீட கருத்தரங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

ஊடக கழகத்தின் தலைவர் த. விதுஷன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் நூல் அறிமுக உரையை ஊடகக் கற்கைகள் துறை உதவி விரிவுரையாளர் செல்வி அ. கிரிஜா வழங்குவார். (ஐ)

## புலோலி அறுபது பாகம் கிணறை புனரமைத்துத் தருமாறு கோரிக்கை!

வடமராட்சி, ஏப். 09

பல நூற்றாண்டுகாலம் மக்கள் பாவனையிலுள்ளதும் மரபுரிமையுமான புலோலி அறுபது பாகம் கிணறை புனரமைக்க நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட் டுள்ளது.

தற்போது தொல்பொருள் திணைக்களத்தின் கீழுள்ள இந்தக் கிணறு பல ஆண்டுகளாக பராமரிப்பின்றி காணப்படுகிறது. எனவே, இந்தக் கிணற்றை புனரமைக்க வேண்டும் என்று அந்தப் பகுதிக்கு சென்ற யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஜெ. ரஜீவனிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதேநேரம், இந்தக் கிணறை உரியமுறையில் புனரமைத்து சுற்றுலா மூலமாக வருமான மீட்டுவது தொடர்பில் உரிய தரப்புகளுடன் உரையாடுவதாக இதன்போது ரஜீவன் எம். பி. அப்பகுதியினருக்கு உறுதியளித்தார். (ஐ)

## உமந்தாவ பௌத்த கிராமத்தின் ஏற்பாட்டில் நெடுந்தீவில் புத்தாண்டு கொண்டாட்டம்!



யாழ்ப்பாணம், ஏப். 09

உமந்தாவ பௌத்த கிராமம் மற்றும் சிறீ சுதகம் கிராம குழுவினரின் ஏற்பாட்டில் தமிழ் - சிங்கள புதுவருட கொண்டாட்டம் நெடுந்தீவில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

நெடுந்தீவு மாவலித்துறை றோமன் கத்தோலிக்க வித்தியாலயத்தில் இடம்பெற்ற நிகழ்வில் 350 பாடசாலை மாணவர்கள் பங்குபற்றி இருந்தனர்.

கலந்து கொண்ட மாணவர்களுக்கு புதுவருட ஆடைகள் வழங்கி வைக்கப்பட்டதுடன், மதிய உணவுடன் மாணவர்களுக்கிடையே விளையாட்டு போட்டிகளும் நடத் தப்பட்டு பரிசுகளும் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் உமந்தாவ குளோபல் பௌத்த கிராமத்தின் சிறீ சமந்தபத்ர அரஹத் தேரர், நயினாதீவு விகாராதிபதி, நெடுந்தீவு பிரதேச செயலாளர் கடற்படையினர் மற்றும் பாடசாலை சமூகத்தினர் பங்கேற்றனர். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu 09.04.2025 புதன்கிழமை
பிலவ வருடம், பங்குனி 26

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

## மீனவர் பிரச்னையில் தமிழ்நாடு

"இலங்கை பயணத்தின்போது இந்திய பிரதமர் நரேந்திர மோடி தமிழ்நாட்டு மீனவர்களின் பிரச்னையை கண்டு கொள்ளவில்லை", என்று தமிழ்நாட்டு முதலமைச்சர் ஸ்டாலின் கண்டனம் தெரிவித்திருக்கிறார். இலங்கை பயணத்தின்போது மோடி இது தொடர்பில் பேசியிருந்தார். தமிழ் கட்சிகளுடனான சந்திப்பின்போதும் இலங்கை மீனவர் பிரச்னை தொடர்பில் தமிழ் கட்சிகள் சுட்டிக்காட்டியிருந்தன என்று செய்திகள் வெளியாகியிருந்தன.

இந்தப் பிரச்னை தொடர்பில் இந்தியாவின் நிலைப்பாட்டை மோடி, மீண்டும் தனது பயணத்தின்போது வெளிப்படுத்தியிருந்தார். அதாவது, 'இந்த விடயத்தில் மனிதநேய அணுகுமுறை வேண்டும்' , இதன்மூலம் அவர் என்ன கூறுகின்றார். இந்த விடயத்தில் இந்திய மீனவர்களை கைது செய்து தடுத்து வைப்பதோ - அவர்களை தாக்குவதோ தீர்வல்ல. அதற்கு மாறாக, இந்த விடயத்தை மனிதநேயத்தோடு அணுகவேண்டும் என்பதே இந்தியாவின் நிலைப்பாடு.

இந்த நிலைமையை எவ்வாறு மனிதநேயத்தோடு அணுகுவது? இதிலுள்ள அடிப்படையான பிரச்னை தமிழ்நாடு. இது தொடர்பில் 'ஈழநாடு' முன்னரும் சில விடயங்களை சுட்டிக்காட்டியிருக்கிறது. இந்த விடயத்தில் தமிழ்நாட்டு அரசாங்கத்தின் ஆதரவு கட்டாயமானது. இது தொடர்பில், தமிழ்நாட்டை எவ்வாறு அணுகுவது என்று தமிழ் அரசியல் தரப்புகள் சிந்திக்க வேண்டும். தமிழ்நாட்டு முதலமைச்சர் ஸ்டாலினை இது தொடர்பில் அணுகவேண்டும்.

இதுவரையில் இந்த விடயம் தொடர்பில் ஆக்கபூர்வமான சந்திப்புகள் எதனையும் தமிழ்த் தேசிய அரசியல் தரப்புகளாக தங்களை அடையாளப்படுத்துபவர்கள் முன்னெடுக்கவில்லை. அயலக மாநாட்டில் பங்குகொள்கின்றனர். ஆனால், மீனவர் பிரச்னை தொடர்பில் உத்தியோகபூர்வமான பேச்சுகளில் இதுவரையில் தமிழ் அரசியல் தரப்புகள் பங்குகொள்ளவில்லை.

வெறுமனே இந்திய மத்திய அரசிடம் முறையிடுவதால் இந்தப் பிரச்னையை கையாள முடியாது. இந்திய மத்திய அரசும் கூட, அவ்வாறான அணுகுமுறையையே விரும்புவதா கத் தெரிகிறது. இரண்டு தரப்புகளும் தங்களுக்குள் பேசி பிரச்னையை தீர்ப்பதற்கான வழிவகைகளை ஆராய வேண்டும் என்றே கருதுவதாகத் தெரிகிறது.

ஏனெனில், வடக்கு மாகாண அரசியல்வாதிகளும் தமிழ்நாட்டு அரசியல்வாதிகளும் உரையாடுவதில் ஒரு தடையுமில்லை. கலாசார ரீதியாகவும் மொழி ரீதியாகவும் ஒருவரோடு ஒருவர் பின்னிப்பிணைந்த வரலாற்றைக் கொண்டிருப்பவர்கள். எனவே, இந்தப் பிரச்னையை தங்களுக்குள் பேசித் தீர்த்துக் கொள்ள முடியுமென்றே புதுடில்லி கருதக்கூடும். இந்த அடிப்படையில்தான், இந்திய மத்திய அரசு தொடர்ந்தும் மனிதநேய அணுகுமுறையை வலியுறுத்தி வருகிறது. எனவே, இந்த விடயத்தில் பிரச்னைக்குரிய தரப்புகளான ஈழத் தமிழர் பிரதிநிதிகளும் தமிழ் நாட்டு அரசாங்கமும் உரையாட வேண்டும். வடக்கு மாகாண சபைத் தேர்தல் நடைபெற்ற பின்னர் இரு மாகாண அரசாங்கங்கள் என்னும் வகையிலும் இந்த விடயத்தை அணுகலாம்.

# யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் வணிக பீடத்தில் தொழிற் சந்தை



யாழ்ப்பாணம், ஏப்.09

யாழ்ப்பாணப் பல்கலைக் கழக முகாமைத்துவக் கற்கைகள் மற்றும் வணிக பீடத்தின் தொழிற் சந்தை நிகழ்வு நேற்றுக் காலை முதல் கலாசாலை வீதி, திருநெல்வேலி கிழக்கில் அமைந்துள்ள முகாமைத்துவக் கற்கைகள் மற்றும் வணிகபீட வளாகத்தில் நடைபெற்றது.

முகாமைத்துவக் கற்கைகள் மற்றும் வணிக பீடத் தொழில் வழிகாட்டல் அலகினால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்தத் தொழில் வாய்ப்பு சந்தை பீடாதிபதி என். கெங்காதரன் தலைமையில் நடைபெற்றது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் சி. சிறிசற்குணராஜா பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு தொழிற் சந்தை யைத் திறந்து வைத்தார்.

முகாமைத்துவ பீட இறுதியாண்டு மாணவர்களுக்கான தொழில் பயிற்சி வாய்ப்பைப் பெற்றுக் கொடுக்கும் நோக்கில், வங்கிகள், கணக்கியல், நிதியியல், மனிதவள, சந்தைப்படுத்தல், வணிகத் தொழில்நுட்பம் , தொடர்பாடல் மற்றும் ஆடை உற்பத்திகளில் ஈடுபடும் சுமார் 30 தொழில் வழங்குநர்கள் இதில் கலந்து கொண்டனர். இந்த நிகழ்வில் 800 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் கலந்து கொண்டு தமது தொழில் வாய்ப்புகள் பற்றிய அறிவைப் பெற்றுக் கொண்டதோடு, கலந்து கொண்ட தொழில் வழங்குநர்களிடம் தமது தொழில் வாய்ப்புக்கான விண்ணப்பங்களையும் சமர்ப்பித்தனர்.

இந்த நிகழ்வில் யாழ். பல்கலைக்கழக உயர்பட்டப் படிப்புகள் பீடாதிபதி தி. வேல்நம்பி, முகாமைத்துவக் கற்கைகள் மற்றும் வணிக பீடத் தொழில் வழிகாட்டல் அலகின் தலைவர் என். உமாகாந், துறைத் தலைவர்கள், விரிவுரையாளர்கள் மற்றும் பணியாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். (எ)

# சந்நிதியான் ஆச்சிரமத்தால் 55 குடும்பங்களுக்கு உதவி



யாழ்ப்பாணம், ஏப். 09

சித்திரை புத்தாண்டை முன்னிட்டு சந்நிதியான் ஆச்சிர்மத்தால் 55 குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட்டன.

புத்தளம் மாவட்டத்திலுள்ள சேனைக்குடியிருப்பு, மணல் குன்று, அபயபுர, அரலியபுயன பிரதேசங்களில் வாழும் பல்லின சமூகங்களைச் சேர்ந்த 55 குடும்பங்களுக்கு 2 இலட்சம் ரூபாய் பெறுமதியான அத்தியாவசியமான உணவுப் பொருட்கள் வழங்கப்பட்டன.

இந்த உதவித் திட்டம் சமூக சேவையாளரும் கருமாரி அம்மன் ஆலய ஸ்தாபகருமான எஸ். மகேந்திரன் தலைமையில் சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் கலாநிதி மோகனதாஸ் சுவாமிகள் தலைமையிலான ஆச்சிரம தொண்டர்களால் கடந்த ஞாயிற்றுக்கிழமை நேரில் சென்று வழங்கப்பட்டது. (எ-02)


# வடமாகாண கடற்படை தளபதி புதில் அரசாங்க அதிபர் சந்திப்பு



யாழ்ப்பாணம், ஏப்.09

வடமாகாண கடற்படைத் தளபதியாக புதிதாக கடமையேற்ற ரியல் அட்மிரல் எஸ். ஜே. குமார, யாழ்ப்பாணம் மாவட்ட பதில் அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபனை நேற்று முன்தினம் அரசாங்க அதிபர் அலுவலகத்தில் சந்தித்து கலந்துரையாடினார். (எ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏப்ரல் - 09 புதன்கிழமை
குரோதி வருடம் - பங்குனி 26
நல்ல நேரம் : 09.00 - 10.30
ராகு காலம் : 12.00 - 01.30
திதி : துவாதசி




**மேடம்**
உங்களை சுற்றியிருப்பவர்களின் சுயரூபம் தெரிய வரும். வியாபாரத்தில் நெளிவு சுளிவுகளை கற்றுக் கொள்வீர்கள். உத்தியோகத்தில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும். கனவு நனவாகும் நாள்.

**இடபம்**
திட்டமிட்ட காரியங்கள் தடையின்றி முடியும். வீடு வாகனத்தை சீர்செய்வீர்கள். வெளிவட்டாரத்தில் புது அனுபவம் உண்டாகும். சக ஊழியர்கள் ஆதரிப்பார்கள். உழைப்பால் உயரும் நாள்.

**மிதுனம்**
உடன்பிறந்தவர்கள் உங்கள் வளர்ச்சிக்கு சாதகமாக இருப்பார்கள். வியாபாரத்தில் பழைய சரக்குகளை விற்பீர்கள். உயரதிகாரி சில சூட்சமங்களை சொல்லித் தருவார். வெற்றிக்கு வித்திடும் நாள்.

**கடகம்**
கடந்த இரண்டு நாட்களாக இருந்த மன உளைச்சல் நீங்கி எதிலும் தெளிவு பிறக்கும். உடல் நலம் சீராகும். வியாபாரத்தில் இழந்ததை மீட்பீர்கள். மரியாதை கூடும். மகிழ்ச்சியான நாள்.

**சிம்மம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் தோல்வி மனப்பான்மையால் மன இறுக்கம் அதிகரிக்கும். உத்தியோகத்தில் கூடுதலாக வேலைப் பார்க்க வேண்டி வரும். விட்டுக் கொடுத்துப் போக வேண்டிய நாள்.

**கன்னி**
எதிர்காலம் பற்றிய வீண் டென்ஷன் வந்து செல்லும். வியாபாரத்தில் போராடி லாபம் ஈட்டுவீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களால் பிரச்னைகள் வரக்கூடும். விழிப்புணர்வு தேவைப்படும் நாள்.

**துலாம்**
எதையும் சமாளிக்கும் சாமர்த்தியம் பிறக்கும். பெற்றோரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். வியாபாரத்தில் புது ஒப்பந்தங்களால் லாபம் பெருகும். ஊழியர்கள் பாராட்டுவார்கள். மதிப்பு கூடும்.

**விருச்சிகம்**
உறவினர்கள் நண்பர்கள் ஆதரவாகப் பேசத் தொடங்குவார்கள். வியாபாரத்தில் எதிர்பாராத தன லாபம் உண்டு. உத்தியோகத்தில் சக ஊழியர்கள் மதிப்பார்கள். சாதித்துக் காட்டும் நாள்.

**தனுசு**
கடந்த இரண்டு நாட்களாக கணவன்-மனைவிக்குள் இருந்த பிணக்குகள் நீங்கும். புண்ணிய ஸ்தலம் சென்றுவருவீர்கள். வியாபாரத்தில் பற்று வரவு கணிசமாக உயரும். சிக்கல்கள் தீரும்.

**மகரம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் சிலர் உங்களை சீண்டிப் பார்ப்பார்கள். வியாபாரத்தில் பழைய சரக்குகளை போராடி விற்பீர்கள். உத்தியோகத்தில் அதிகாரிகளுடன் ஈகோ பிரச்னை வந்து நீங்கும்.

**கும்பம்**
ஆடை ஆபரணம் சேரும். தாயாரின் உடல் நலம் சீராகும். வியாபாரத்தில் வேலையாட்கள் ஒத்துழைப்பார்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களுக்கு உதவுவீர்கள். திறமைகள் வெளிப்படும் நாள்.

**மீனம்**
அரசால் அனுகூலம் உண்டு. உங்களால் மற்றவர்கள் பயனடைவார்கள். வியாபாரத்தில் பற்று வரவு உயரும்.உயரதிகாரிகள் அதிசயிக்கும் படி நடந்துக் கொள்வீர்கள். திடீர் யோகம் கிட்டும்.

# வவுனியா பல்கலைக்கழகத்தில் மருத்துவபீடம் ஆரம்பிக்க முயற்சி

வவுனியா, ஏப். 09

வவுனியா பல்கலைக்கழகத்தில் மருத்துவ பீடத்தை ஆரம்பிப்பதற்கான முதற்கட்ட முயற்சியாக நேற்று முன்தினம் வன்னி பாராளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தான் தலைமையில் கலந்துரையாடல் ஒன்று பல்கலைக்கழக வளாகத்தில் நடைபெற்றது.



வவுனியா பல்கலைக்கழகத்தில் மருத்துவபீடத்தை ஆரம்பிப்பதன் ஊடாக வவுனியா மாவட்ட அபிவிருத்தி மற்றும் வவுனியா மருத்துவமனையின் அபிவிருத்தித் திட்டங்கள் உட்பட பல்வேறு அபிவிருத்திகளை முன்னெடுக்க முடியும் என்பதோடு பாராளுமன்ற உறுப்பினர் மஸ்தானின் முயற்சியால் முதற்கட்ட பேச்சுகள் பல்கலைக்கழக நிர்வாகத்தினரோடு நடைபெற்றது.

இதேவேளை, பல்கலைக்கழகத்தில் மருத்துவபீடம் அமைக்கப்படுமாக இருந்தால் அதற்கான நிதி உதவியைப் பெற்றுக் கொள்வது தொடர்பிலும் அதன் சாத்தியப்பாடுகள் தொடர்பிலும் பாராளுமன்ற உறுப்பினரால் தெரிவிக்கப்பட்டது.

இதன் தொடர்ச்சியாக ஒரு குழு அமைக்கப்பட்டதுடன் தொடர் நடவடிக்கைகளை மேற்கொண்டு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அனுமதியை பெறுவதற்கான ஏற்பாடுகளுக்கும் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இந்தக் கலந்துரையாடலில் வவுனியா பல்கலைக்கழக துணைவேந்தர் ஏ. அற்புதராஜா, பல்கலைக்கழகத்தின் துறைத் தலைவர்கள், மருத்துவர்கள், பிரதேச செயலாளர், சட்டத்தரணிகள் மற்றும் பல்கலைக்கழக செயல்பாடுகளில் ஆர்வம் உள்ளவர்களும் பங்கேற்றனர். (எ-10)

# திசைகாட்டி தமிழ் மக்களை நாசமாக்கும்

## சிவாஜிலிங்கம் எச்சரிக்கை

யாழ்ப்பாணம், ஏப். 09

ஜே. வி. பி. என்கின்ற தேசிய மக்கள் சக்தியை தமிழர் பகுதிகளில் இருந்து விரட்டுவதற்கு உள்ளூராட்சி மன்றத் தேர்தலை தமிழ் மக்கள் பயன்படுத்த வேண்டும் என்று முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம். கே. சிவாஜிலிங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளார். திசைகாட்டி தமிழ் மக்களை நாசமாக்கும் என்றும் அவர் எச்சரித்துள்ளார்.

யாழ். நல்லூர் இளங்கலைஞர் மண்டபத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற வேட்பாளர் அறிமுக கூட்டத்தில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"தமிழ் மக்களுக்கு எதிராக இனக் கலவரங்களை முன் நின்று நடத்திய ஜே. வி. பி. கும்பல் பெயரை மாற்றி தேசிய மக்கள் சக்தியாக கடந்த ஜனாதிபதித் தேர்தலில் தமிழர் பகுதிகளில் அதிக வாக்குறுதிகளை அள்ளி வீசி வாக்குகளைப் பெற்றது.

தேர்தல் முடிந்து ஆறு மாதம் கடந்த நிலையில் அவர்களால் வழங்கப்பட்ட வாக்குறுதிகள் அனைத்தும் வெற்று வாக்குறுதிகளாகக் கப்பட்டமையே உண்மை.

வடக்கு - கிழக்கை பிரித்தார்கள், சுனாமி அழிவின் போது தமிழ் மக்களுக்கு கிடைக்க வேண்டிய உதவிகளை கிடைக்க விடாமல் போராட்டங்களை நடத்தி தடுத்தவர்களும் இந்த ஜே. வி. பி. அணியினர் தான்.

அது மட்டுமல்லாது சந்திரிகா ஜனாதிபதியாக இருந்த போதும் மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்த போதும் தமிழ் மக்களுக்கு எதிராக தொடுக்கப்பட்ட ஆயுதப் போருக்கு சிங்கள மக்களை வீடு வீடாகச் சென்று ஆள் சேர்த்து கொடுத்தவர்களும் இவர்கள் தான்.

தற்போது உள்ளூராட்சி மன்றத் தேர்தல் இடம்பெறவுள்ள நிலையில் உள்ளூராட்சி மன்றங்களை கைப்பற்றினால் தமிழ் மக்களுக்கு அரசியல் தீர்வு என்ற பேச்சுக்கே இடமில்லாமல் ஆக்கும் முயற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

தமிழ் மக்களின் வீரம் செறிந்த வரலாற்று இடமான வல்வெட்டித் துறையை கைப்பற்ற வேண்டும் என கங்கணம் கட்டிக் கொண்டிருக்கும் ஜே.வி.பி. என்கின்ற தேசிய மக்கள் சக்தியை வல்வெட்டித்துறை மண்ணிலிருந்து விரட்டி அடிப்பதோடு மட்டுமல்லாது தமிழர் பகுதிகளிலிருந்து விரட்டி அடிக்க வேண்டும்.

ஏனெனில் இலங்கை அரசியலில் ஆபத்தானவர்கள் ஜே. வி.பியினர். அவர்களின் கடந்த காலம் தொடர்பில் தற்போதைய தலைமுறையினர் உணர்ந்திருக்காவிட்டாலும் வரலாறுகளை புரட்டிப் பார்ப்பதன் மூலம் அவர்களின் தமிழின கொலைவெறிகளை அறிந்து கொள்ளலாம்.

தமிழ் மக்கள் சலுகைகளுக்காக உரிமைப் போராட்டம் நடத்தவில்லை. வடக்கு - கிழக்கு எமது இன விடுதலைக்காக பல்லாயிரக்கணக்கான உயிர்கள் விதைக்கப்பட்ட பூமி.

எனவே, உள்ளூராட்சி மன்றத் தேர்தலை எமது இனத்தின் இருப்புக்கான தேர்தலாக நினைத்து சிங்கள தேசியத்தையும் அவர்களின் நிகழ்ச்சி நிரலில் செயல்படும் தமிழ்க் கட்சிகளையும் விரட்டியடிக்க தமிழ் மக்கள் தயாராக வேண்டும்"- என்றார். (எ)

# தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் வேட்பாளர் அறிமுகம் சாவகச்சேரியில்

யாழ்ப்பாணம், ஏப்.09

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் சாவகச்சேரி தொகுதி வேட்பாளர்கள் அறிமுக நிகழ்வு சாவகச்சேரி கலை கலாசார மண்டபத்தில் நடைபெற்றது.

சாவகச்சேரி நகர சபையின் முன்னாள் உறுப்பினர் வி. விஜேந்திரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் செயலாளர் செ. கஜேந்திரன், ஓய்வு நிலை அதிபர் க. அருந்தவபாலன், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் முக்கியஸ்தர்கள் மற்றும் சாவகச்சேரி நகர சபை மற்றும் பிரதேச சபை வட்டாரங்களில் போட்டியிடும் வேட்பாளர்கள் கலந்து கொண்டனர். (எ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரபாகரனை காப்பாற்ற விடாது இந்தியாவே தடுத்து நிறுத்தியது!

## முன்னாள் அமைச்சர் எஸ். பி.

கொழும்பு, ஏப். 09

**"இறுதிக்கட்ட போரின்போது வடக்குக்கு வந்து பிரபாகரனை அழைத்துச் செல்வதற்கு பலம்பொருந்திய நாடுகள் முயற்சித்தன. இந்தியாவே அதனை தடுத்து நிறுத்தியது." என்று முன்னாள் அமைச்சர் எஸ். பி. திஸாநாயக்க தெரிவித்தார்.**



எனவே, இந்தியாவின் ஒத்துழைப்பு இல்லாது இருந்திருந்தால் ஒருபோதும் போரை முடித்திருக்க முடியாது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

"இந்தியா தொடர்பில் சிலர் போலியான மாயையை தோற்றுவிப்பதற்கு முற்படுகின்றனர். எமது நாட்டை இந்தியா ஒரு போதும் தாக்க முற்படாது. சிறீமாவோ அம்மையாரின் காலத்தில் கச்சதீவைக்கூட வழங்கியது.

இதேபோல இந்தியாவின் ஒத்துழைப்பு இருந்திருக்காவிட்டால் மகிந்த ராஜபக்ஷவால் ஒருபோதும் போரை முடித்திருக்க முடியாது."

இறுதிக் கட்டபோரின் போது பலம் பொருந்திய சில நாடுகள் பிரபாகரனை அழைத்துச்செல்ல முற்பட்டன. அதற்குரிய அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருந்தன.

அதனை இந்தியாவே தடுத்து நிறுத்தியது. அதனால் தான் 30 வருட கால போரை முடிவுக்கு கொண்டுவர முடிந்தது. எனவே, இந்தியாவுடன் நெருக்கமான உறவை பேணுவதில் எவ்வித தவறும் கிடையாது.

அந்தவகையில் தற்போதைய அரசாங்கத்தின் நகர்வு சரியானது." - என்றும் அவர் கூறியுள்ளார். (ஐ)

# அமெரிக்காவின் புதிய வரியால் சாதாரண மக்களுக்கே பாதிப்பு!



கொழும்பு, ஏப். 09

அமெரிக்காவில் (இன்றுமுதல்) நடைமுறைக்கு வரும் 44 வீத வரியால் நாடு பாதிப்புகளை சந்திக்கும். இதனால் சாதாரண மக்களே பாதிக்கப்படுவர். குழுக்களை அமைப்பதன் மூலம் இவற்றை தடுத்து நிறுத்த முடியாதுஎன்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

சிலாபத்தில் நடந்த மக்கள் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

டொனால்ட் ட்ரம்ப் ஜனாதிபதியாக பதவியேற்ற பிறகு அமெரிக்காவுக்கான ஏற்றுமதிக்கு அதிக வரி விதிப்பார் என்பதை சர்வதேச விவகாரங்கள் தொடர்பில் நன்கு புரிதல் கொண்ட ஐக்கிய மக்கள் சக்தி அறிந்து எச்சரிக்கை விடுத்தது. இதேபோன்று, 44வீத பரஸ்பர வரியை ட்ரம்ப் விதித்துள்ளார்.

எமது நாட்டின் ஆடை ஏற்றுமதியில் 40 வீதம் அமெரிக்காவுக்கே ஏற்றுமதி செய்யப்படுகின்றன. மேலும், தேயிலை, இறப்பர் மற்றும் பிற மீன்பிடி பொருட்களும் அமெரிக்காவுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. 44 வீத பரஸ்பர வரியால் முந்தைய விலையில் போட்டித் தன்மையுடன் எம்மால் விற்க இயலாது.

சில மாதங்களுக்கு முன்னரும் வரவு - செலவு திட்ட விவாதத்தின் போதும் இது குறித்து நாம் சுட்டிக்காட்டினோம். ஆனால், அரசாங்கம் ஆணவமான பதில்களை வழங்கியதுடன் சுட்டிக்காட்டிய விடயங்களை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தது - என்றார். (ஐ)

# சர்வதேசத்தின் ஒத்துழைப்புடன் நாட்டை முன்னேற்றி வருகிறோம்!

## ஜே. வி. பியின் பொதுச் செயலர்

கொழும்பு, ஏப். 09

தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்துக்கு சர்வதேசத்தின் ஒத்துழைப்பு கிடைக்காது என்றவர்கள் இன்று சர்வதேசத்துக்கு நாட்டை அரசாங்கம் காட்டிக்கொடுப்பதாகக் குற்றஞ்சாட்டுக்கிறார்கள்.



ஆனால், சர்வதேசத்தின் ஒத்துழைப் புடன் நாட்டை முன்னோக்கி கொண்டு செல்ல முடியும் என்பதை நிரூபித்துள்ளோம் - என்று மக்கள் விடுதலை முன் னணியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்தார்.

குருநாகல் - பண்டுவஸ் நுவரவில் நடந்த மக்கள் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், அன்று தேர்தலின் போது எதிர்க்கட்சியினர் தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்துக்கு சர்வதேசத்தின் ஒத்துழைப்பு கிடைக்காது என்றனர். ஆனால், எமது அரசாங்கத்துக்கே சர்வதேச நாடுகளின் ஒத்துழைப்பு அதிகளவில் கிடைக்கப் பெற்றுள்ளது.

எமது அயல் நாட்டின் தலைவர் நாட்டுக்கு உத்தியோகபூர்வ பயணமாக நாட்டுக்கு வந்து பல்வேறு ஒப்பந்தங்களில் கைச்சாத்திட்டு சென்றுள்ளார். ஆனால், எதிர்க்கட்சியினர் சர்வதேசத்துக்கு நாட்டை அரசாங்கம் காட்டிக் கொடுப்பதாக தற்போது குற்றஞ்சாட்டுக்கிறார்கள்.

அரசாங்கம் நாட்டை காட்டிக் கொடுக்கவில்லை. அவர்கள் காட்டிக்கொடுத்த வற்றை நாமே நிறுத்தியுள்ளோம்.

ரணில் விக்கிரமசிங்க மில்கோ நிறுவனத்தை இந்தியாவின் தனியார் நிறுவனமொன்றுக்கு விற்பனை செய்வதற்கு தயாராக இருந்தார்.

ஆனால், நாம் அதிகாரத்துக்கு வந்ததன் பின்னர் அந்த ஒப்பந்தத்தை இடைநிறுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தோம்.

நட்டத்தில் இயங்குவதாக கூறப்பட்ட மில்கோ நிறுவனம் தற்போது இலாபமீட்டும் நிறுவனமாக மாற்றப்பட்டுள்ளது.

திரிபோஷா நிறுவனம் விற்பனை செய்யப்படவிருந்தது. ஆனால், தற்போது திரிபோஷா உற்பத்தியை மேற்கொண்டு அதனை இலாபமீட்டும் நிறுவனமாக மாற்றியுள்ளோம். இதுவே எமது முயற்சியாகும்.

இதேபோன்று மஹவ-ஓமந்தை புகையிரத பாதை மற்றும் மஹவ-அநுராதபுரம் புகையிரத பாதை சமிக்ஞை கட்டமைப்பு ஆரம்பத்தில் இந்தியாவின் கடன் உதவி திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டு வந்தது.

ஆனால், ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க இந்தியாவுக்கு சென்றிருந்த போது இந்திய பிரதமர் இந்தத் திட்டங்களை அன்பளிப்பாக வழங்குவதாக குறிப்பிட்டார்.

இதேபோன்று இந்தியாவிடமிருந்து நாம் கடன்களை பெற்றுக் கொண்டுள்ளோம். தற்போது இந்த கடனுக்கான வட்டியை குறைப்பதாக பிரதமர் எமக்கு வாக்குறுதி அளித்துள்ளார்.

எதிர்க்கட்சியினர் முன்வைத்த குற்றச்சாட்டுக்களை முறியடித்து நாம் சர்வதேசத்தின் ஒத்துழைப்புடன் நாட்டை முன்னோக்கிக் கொண்டு செல்ல முடியும் என்று நிரூபித்துள்ளோம் - என்றார். (ஐ)

# இறைச்சி, முட்டையின் விலைகள் அதிகரிப்பு!

கொழும்பு, ஏப். 09

கோழி இறைச்சி மற்றும் முட்டைகளின் விலைகள் படிப் படியாக அதிகரித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பண்டிகைக் காலத்தில் அதிகமான தேவை இருப்பதாலே இவ்வாறு அதிகரிப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன்படி, தற்போது ஒரு முட்டை 39 முதல் 41 ரூபாய் வரை விற்கப்படுகிறது.

இதேபோல ஒரு கிலோ கோழி இறைச்சி 1,100 முதல் 1,200 ரூபாய் வரை விற்பனை செய்யப்படுகிறது. (ஐ)

# பெண்களுக்கான பொருளாதார அதிகார சூழலை உருவாக்குவோம்

## பிரதமர் ஹரிணி அமரசூரிய



கொழும்பு, ஏப். 09

நாட்டின் அனைத்து பெண்களும் பொருளாதார ரீதியாக அதிகாரம் பெற்று தங்கள் திறமைகளை வெளிப்படுத்தக் கூடிய சூழலை உருவாக்குவதற்கு அரசாங்கம் உறுதிபூண்டுள்ளது என்று பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

கொழும்பில் உள்ள கிங்ஸ்பெரி ஹோட்டலில் ஐ. எம். ஆர். ஏ. அறக்கட்டளை நடத்திய விருது வழங்கும் நிகழ்வில்லேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

நாடு முழுவதும் உள்ள முஸ்லிம் பெண்களின் அசைக்க முடியாத பங்களிப்பையும் அத்தகைய பெண்கள் தங்கள் திறமைகளை வெளிப்படுத்தவும், சிறந்து விளங்கும் பயணத்தில் அவர்களின் அர்ப்பணிப்பு மற்றும் தைரியத்தை வெளிப்படுத்தவும் ஒரு தளத்தை வழங்குவதில் ஐ. எம். ஆர். ஏ. அறக்கட்டளையின் பங்களிப்பையும் பாராட்டுவதாக அவர் கூறினார்.

சட்டம், சுகாதாரம், கல்வி, ஊடகம் மற்றும் தொழில்முனைவோர் என பல்வேறு துறைகளில் ஈடுபட்டுள்ள இந்தப் பெண்கள், நமது சமூகத்தில் சாதாரண மக்கள் மட்டுமல்ல, அந்தத் துறைகளின் எதிர்கால படைப்பாளிகள் என்றும், கல்வி மற்றும் சுகாதாரம் உள்ளிட்ட பல துறைகளில் குறிப்பிடத்தக்க புதுமைகள் மற்றும் தொழில்முனைவோருக்கான அர்ப்பணிப்பைக் காணலாம் - என்றும் மேலும் கூறினார். (ஐ)

# தமிழ் மக்கள் பொறுப்பை உணராவிடின் சரித்திரத்தில் இல்லாமலாக்கப்படுவோம்

## கஜேந்திரகுமார் எம். பி. எச்சரிக்கை



யாழ்ப்பாணம், ஏப். 09

தமிழ் மக்களுக்கு உள்ளூராட்சி தேர்தலானது தமிழின இருப்புக்கான தேர்தலாக பார்க்கப்படுகின்ற நிலையில் தமிழ் மக்கள் தமது பொறுப்பை உணராவிட்டால் சரித்திரத்தில் இல்லாமல் ஆக்கப்படுவோம் என என தமிழ்தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

நல்லூர் இளம் கலைஞர் மண்டபத்தில் நடந்த வேட்பாளர் அறிமுக நிகழ்வில் உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், கடந்த பாராளுமன்ற தேர்தலில் தேசிய மக்கள் சக்தி என்கின்ற ஜே. வி. பியின் கட்சிக்கு தமிழ் மக்களில் ஒரு பகுதியினர் ஈர்க்கப்பட்டமை உண்மையான விடயம். தமிழ் மக்களுக்கு தேர்தல் காலத்தில் வழங்கப்பட்ட வாக்குறுதிகள் நிறைவேற்றப்பட்டதா இல்லையா என்பது தொடர்பில் ஆராய்வதற்காக ஆறு மாத காலங்கள் போதும் என நினைக்கிறேன்.

தென் இலங்கைக்கு வேண்டுமானால் உள்ளூராட்சி மன்ற தேர்தல் ஒரு சாதாரண தேர்தலாக அமையலாம் ஆனால், வடக்கு கிழக்கை பொறுத்தவரையில் உள்ளூராட்சி மன்ற அதிகாரம் என்பது தமிழ் மக்களின் உரிமை போராட்டம் சார்ந்த பிரச்னை.

சிங்கள தேசிய வாதம் விதைக்கப்படுகின்ற நிலையில் தமிழ்த் தேசியவாதத்தை பாதுகாப்பதற்காகவும் தமிழ் மக்களின் இருப்புகளை பாதுகாப்பதற்கான ஒரு தேர்தலாக உள்ளூராட்சி மன்ற தேர்தலை பார்க்க வேண்டும்.

தமிழ் மக்களால் ஜனநாயக வாக்குகளின் அடிப்படையில் நிராகரிக்கப்பட்டவர்கள் இன்று தமிழ் அரசு கட்சியை ஆக்கிரமித்து உள்ள நிலையில் அதிலிருந்து விடுபட்டு தமிழ்த் தேசிய நிலைப்பாட்டை கட்டியெழுப்புவதற்காக எம்முடன் பலர் கைகோத்துள்ளார்கள் இணைந்து பயணிப்போம் - என்றார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆடைகள் ஏற்றுமதிக்கு மாற்று சந்தை தேவை!

### பேராசிரியர் வசந்த அறிவுறுத்து

கண்டி, ஏப். 09

**இலங்கையில் இருந்து அதிகளவான ஆடைகள் அமெரிக்காவுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. எனவே ஆடை ஏற்றுமதித்துறைக்கு மாற்றுச் சந்தை வாய்ப்புகளை தேட வேண்டியுள்ளது - என்று பேராதனை பல்கலைக்கழகத்தின் பொருளாதாரம் மற்றும் புள்ளிவிபரவியல் துறையின் பேராசிரியர் வசந்த அத்துகோரள தெரிவித்தார்.**



கண்டியில் வைத்து அவர் இது பற்றி மேலும் தெரிவிக்கையில்,இலங்கையிலிருந்து இறக்குமதி செய்யப்படும் அனைத் துப் பொருட்களுக்கும் 44 சதவீத வரி விதிக்க அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தீர்மானித்துள்ள நிலை காரணமாக நாட்டின் பொருளாதாரம் பாதிக்கப்படலாம். இந்த முடிவு சில தொழிற்சாலைகளை மூடுவதற்கும் வழி வகுக்கும்.

உலகெங்கிலும் உள்ள 25 நாடுகள் மீது வரிகளை விதிக்க உள்ளதாக டொனால்ட் ட்ரம்ப் அறிவித்துள்ளார். அமெரிக்காவிற்கு இறக்குமதி செய்யப்படும் அனைத்துப் பொருட்களுக்கும் 10 சதவீதம் குறைந்தபட்ச வரியை ட்ரம்ப் அறிவித்தார்.

2024 ஆம் ஆண்டில், அமெரிக்கா இலங்கையிலிருந்து 300 கோடி டொலர்களுக்கு மேல் இறக்குமதி செய்தது. எனவே, இந்தப் புதிய வரிகள் விதிக்கப்படுவது இலங்கைப் பொருளாதாரத்துக்குக் கடுமையான பாதிப்பை ஏற்படுத்தலாம்.

இந்நிலையில் மாற்று சந்தையை தேடுவதன் மூலம் அமெரிக்காவின் வரி நெருக்கடியை சமாளித்துக் கொள்ள வாய்ப்பாக அமையும் என பொருளியல் நிபுணர்கள் சுட்டிக் காட்டுகின்றனர். எனினும், இலங்கையில் இருந்து அதிகளவான ஆடைகள் அமெரிக்காவுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. எனவே ஆடை ஏற்றுமதித்துறைக்கு மாற்றுச் சந்தை வாய்ப்புகளை தேட வேண்டியுள்ளது - என்றார்.

## தெவிநுவர இரட்டை கொலை சந்தேகநபர்கள் இருவர் சரண்!

கொழும்பு, ஏப். 09

தெவிநுவர விஷ்ணு கோயிலுக்கு முன்பாக இளைஞர்கள் இருவர் சுட்டுக் கொலை செய்யப்பட்ட சம்பவத்துடன் தொடர்புபட்ட துப்பாக்கிதாரி உட்பட இருவர் சரணடைந்துள்ளனர்.

இவர்கள் இருவரும் நேற்று முன்தினம் கந்தர பொலிஸ் நிலையத்தில் சரணடைந்தமையை தொடர்ந்து கைது செய்யப்பட்டனர்.

இவ்வாறு கைதானவர்களில் ஒருவர் துப்பாக்கிச்சூட்டை நடத்தியவர் என்று அடையாளம் காணப்பட்டுள்ளார். கைதானவர்கள் 26, 35 வயதுடைய கந்தர, தெவிநுவர பகுதிகளை சேர்ந்தவர்கள் என்றும் தெரிய வந்துள்ளது.

கடந்த, மார்ச் 21 ஆம் திகதி மாத்தறை - தெவிநுவர விஷ்ணு கோயிலுக்கு மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த இருவரை வானில் வந்தவர்கள் சுட்டுக் கொன்றுவிட்டு தப்பிச் சென்றிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## சமந்த ரணசிங்க எம். பியாகிறார்!

கொழும்பு, ஏப். 09

மறைந்த பாராளுமன்ற உறுப்பினர் கோசல நுவான் ஜயவீரவின் வெற்றிடத்துக்கு சமந்த ரணசிங்க நியமிக்கப்படவுள்ளார்.

தேசிய மக்கள் சக்தியின் கேகாலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கோசல நுவான் ஜயவீர (வயது 38) மாரடைப்பால் கடந்த ஞாயிற்றுக்கிழமை உயிரிழந்தார்.

இதையடுத்து, ஏற்பட்ட வெற்றிடத்துக்கு அந்த மாவட்டத்தில் விருப்பு வாக்கு பட்டியலில் அடுத்தபடியாக அதிகூடிய வாக்குகளைப் பெற்ற ஒழுங்கில் சமந்த ரணசிங்க நியமிக்கப்படவுள்ளார்.இவர், கடந்த பொதுத் தேர்தலில், 41 ஆயிரத்து 306 வாக்குகளைப் பெற்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## முதியவரிடம் கைவரிசை சீனர்கள் இருவர் கைது!

கொழும்பு, ஏப். 09

விமானத்தில் முதியவர் ஒருவரின் 60 ஆயிரம் இலங்கை ரூபாய், 2 ஆயிரம் டொலர் களை களவாடிய சீனர்கள் இருவரை கட்டுநாயக்கா பொலிஸார் கைது செய்துள்ளனர்.

நேற்று முன்தினம் தாய்லாந்திருந்து கொழும்பு வந்த விமானத்தில் 71 வயது முதியவர் ஒருவர் பயணித்துள்ளார். அவர் உறக்கத்திலிருந்த சமயம் அவரின் பையிலிருந்த பணம் திருடப்பட்டது.

பணம் திருடப்பட்டதை அறிந்த முதியவர் இது தொடர்பில் உடனடியாக விமான பணியாளர்களிடம் தெரிவித்துள்ளார்.

விமானம் கட்டுநாயக்காவில் தரையிறங்கிய பின்னர் நடத்தப்பட்ட சோதனையில் அவரிடம் பணத்தை களவாடிய சீனர்கள் இருவர் கைது செய்யப்பட்டனர். இவர்கள் இருவரும் 36, 39 வயதுடையவர்கள். கைதான இருவரும் நீர்கொழும்பு நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்படவுள்ளனர். (ஐ)

## விபத்தில் காயமடைந்தார் என்று பொய்கூறி இறந்தவரை ஆஸ்பத்திரியில் சேர்த்தோர் கைது!

கொழும்பு, ஏப். 09

தாக்குதலில் உயிரிழந்தவரை விபத்தில் இறந்தார் என்று தெரிவித்து மருத்துவமனையில் சேர்ப்பித்த இருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

உயிரிழந்தவரின் மைத்துனரும் மற்றொருவருமே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

அநுராதபுரம் - மொரகொட - மாஹன்கட்டியில் இடம்பெற்ற இந்த சம்பவம் தொடர்பில் மேலும் அறிய வருவதாவது,உயிரிழந்தவர் உறவினரின் நிகழ்வு ஒன்றில் பங்கேற்றுவிட்டு வீடு திரும்பியபோது அவரின் மனைவிக்கும் மைத்துனருக்கும் (மனைவியின் சகோதரன்) இடையே தர்க்கம் இடம்பெற்றுள்ளது.

அவர், இதனைத் தடுக்க முனைந்தபோது நடத்தப்பட்ட தாக்குதலில் உயிரிழந்தார். இதையடுத்து, மைத்துனரும் மற்றொருவரும் அவரை மருத்துவமனையில் சேர்ப்பித்துள்ளனர். இதன்போது, அவர்கள் அவர் வாகன விபத்தில் காயமடைந்தார் என்று கூறியுள்ளனர்.

எனினும், ஏற்கனவே உயிரிழந்த அவர் விபத்தில் உயிரிழக்கவில்லை என்றும் அடித்தே கொல்லப்பட்டார் என்பதும் பரிசோதனையில் தெரிய வந்தது.

இதையடுத்து, உயிரிழந்தவரை மருத்துவமனையில் சேர்ப்பித்த இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.மொரகொட பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## புத்தாண்டை முன்னிட்டு 10 விசேட ரயில் சேவைகள்

கொழும்பு, ஏப்.

தமிழ் - சிங்கள புத்தாண்டை முன்னிட்டு கொழும்பிலிருந்து வெளிமாவட்டங்களுக்கு செல்வோரின் வசதி கருதி 10 விசேட ரயில்கள் சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளது என்று புகையிரதத் திணைக்களம் அறிவித்துள்ளது.கொழும்பு - காங்கேசன்துறை இடையேயும் விசேட ரயில் சேவை இயக்கப்படவுள்ளது. எனவே, பொது மக்கள் தங்களது ஆசனங்களை இணையத்தளத்தில் முன்பதிவு செய்து கொள்ளலாம்.

“விசேட புத்ததாண்டு இரவு” என்று அழைக்கப்படும் ரயில் நான்கு நாட்களுக்கு கொழும்பு - பதுளை இடையே சேவையில் ஈடுப்படுத்தப்படும். இந்த ரயில் எதிர்வரும் 11, 12, 19 மற்றும் 20 ஆகிய திகதிகளில் இரவு 07.30 மணிக்கு கொழும்பு, கோட்டை ரயில் நிலையத்திலிருந்து புறப்படும். பின்னர், கண்டி வழியாக கொழும்புக்கு திரும்பும்.

இதேவேளை, 12 மற்றும் 13



ஆகிய திகதிகளில் காலி நிலையத்திலிருந்து அநுராதபுரம் நிலையத்துக்கு அதிகாலை 04 மணிக்கு ரயில் ஒன்று புறப்படும்.

அத்துடன், 12 மற்றும் 13 ஆம் திகதிகளில் பிற்பகல் 3 மணிக்கு கொழும்பிலிருந்து காலிக்கு ரயில் ஒன்று புறப்படும், இதேநேரத்தில் எதிர்வரும் 11, 12, 16 மற்றும் 21 ஆம் திகதிகளில் காலை 06.10 மணிக்கு காலியில் இருந்து கொழும்புக்கு ரயில் ஒன்று சேவையில் ஈடுப்படும் - என்றும்தெரிவிக்கப்பட்டது.

## மரம் வீழ்ந்து தம்பதி காயம்!



கொழும்பு, ஏப். 09

மோட்டார் சைக்கிளின்மீது மரம் முறிந்து விழுந்ததில் அதில் பயணித்த வயோதிப தம்பதியர் படுகாயமடைந்துள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்று செவ்வாய்க்கிழமை களுத்துறை - கெஸ்பேவ - பட்டுவந்தர பிரதேசத்தில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

பண்டாரகமவிலிருந்து கெஸ்பேவ நோக்கி பயணித்த மோட்டார் சைக்கிளின்மீதே மரம் முறிந்து வீழ்ந்தது. இதில், படுகாயமடைந்த தம்பதியர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்று கெஸ்பேவ பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

## சாமரவுக்கு பிணை கிடைத்தும் தொடர்ந்தும் விளக்கமறியலில்!

கொழும்பு, ஏப். 09

ஊழல் குற்றச்சாட்டுகள் தொடர்பில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள சாமர சம்பத் தசநாயக்கவை பிணையில் செல்ல கொழும்பு பிரதான நீதிவான் தனுஜா லக்மாலி அனுமதியளித்தார்.

எனினும், சாமர சம்பத் தசநாயக்கவுக்கு வெளிநாட்டு பயணத் தடை விதித்தும் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

புதிய ஜனநாயக முன்னணியின் பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சாமர சம்பத் கொழும்பு நேற்று நீதிமன்றில் முற்படுத்தப்பட்டபோதே அவரை பிணையில் விடுவித்தது.

எனினும், வேறொரு குற்றச்சாட்டு தொடர்பான வழக்கில் பதுளை நீதிமன்றம் அவருக்கு எதிர்வரும் 21ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க நேற்று முன்தினம் உத்தரவிட்டுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.

## 8 கோடி ரூபாய் பெறுமதியான சிகரெட்களுடன் நால்வர் கைது


கொழும்பு, ஏப். 09

சட்டவிரோதமாக கொண்டுவரப்பட்ட 8 கோடியே 40 இலட்சம் ரூபாய் பெறுமதியான வெளிநாட்டு சிகரட்களுடன் 4 சந்தேகநபர்கள் கட்டுநாயக்கத விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டனர்.

கைதானவர்களில் இருவர் 26, 35 வயதுடைய மாவத்தகம பிரதேசத்தைச் சேர்ந்தவர்களும் 28 வயதான இரத்தினபுரி மற்றும் 26 வயது நபரளாவர். நால்வரும் நேற்று முன்தினம் டுபாயி லிருந்து கட்டுநாயக்கா விமான நிலையத்தை வந்தடைந்தனர். அவர்களிடம் நடத்தப்பட்ட சோதனையில் 5 இலட்சத்து 60 ஆயிரம்சிகரெட்கள்கைப்பற்றப்பட்டன. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எரிபொருள் நிலையத்தில் தீ நால்வர் பலி; நால்வர் காயம்!



கொழும்பு, ஏப். 09

**எரிபொருள் நிரப்பு நிலையம் ஒன்றில் ஏற்பட்ட தீ விபத்தில் நால்வர் உயிரிழந்தனர். மேலும் நால்வர் காயமடைந்தனர் என்று குருநாகல் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.**

நேற்று முன்தினம் இரவு 11 மணியளவில் குருநாகல் - வெஹெர சந்தியிலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில் இந்தத் தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

எரிவாயு சிலிண்டர்களுடன் வந்த லொறிக்கு எரிபொருளை நிரப்பியபோதே வெடிப்பு ஏற்பட்டு தீ பரவியதாகக் கூறப்படுகிறது. குறித்த எரிபொருள் நிரப்பு நிலையத்தில் 6 ஆயிரம் லீற்றர் கொள்ளவு கொண்ட இரு பெரிய தொட்டிகள் இருந்தன என்றும் அவற்றில் ஒன்றிலிருந்த எரிபொருள் முழுமையாகப் பற்றியெரிந்தது.

எனினும், தீயணைப்புத் துறையின் சாதுரியமான - வேகமான முயற்சியால் மற்றைய தொட்டியில் தீ பரவாது காப்பாற்றப்பட்ட தாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதேநேரம், எரிபொருள் நிரப்பலில் முறையாக பயிற்சி பெறாத ஒரு தொழிலாளி செய்த தவறால் இந்த வெடிவிபத்து ஏற்பட்டிருக்க லாம் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

எரிபொருள் நிரப்பு நிலையத்திலிருந்த மேலாளர் மற்றும் தொழிலாளர்கள் இந்த சம்பவத்தில் உயிரிழந்தனர் மற்றும் காயமடைந்துள்ளனர்.

இறந்தவர்களின் உடல்கள் அடையாளம் காணமுடியாத நிலையில் உள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது. சுமார் இரண்டரை மணி நேர போராட்டத்தின் பின்னர் தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது.

இந்த விபத்துத் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# துமிந்தவுக்கு விசேட வசதி எதுவும் வழங்கப்படாது!



கொழும்பு, ஏப். 09

மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ள முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வாவுக்கு வெலிக்கடை சிறைச்சாலை மருத்துவமனையில் விசேட வசதிகள் எதுவும் வழங்கப்படாது என்று சிறைச்சாலை ஆணையாளர் காமினி பி. திஸநாயக்க தெரிவித்துள்ளார்.

சிறைச்சாலை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ள துமிந்த சில்வாவுக்கு உரிய சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

மேலும், சிறைச்சாலையின் மருத்துவமனையிலுள்ள கைதிகளுக்கு வெளியிலிருந்து உணவுகளை வழங்குதல் மற்றும் விசேட வசதிகளை ஏற்பாடு செய்தல் சட்டத்துக்கு எதிரானவை ஆகும்.

எனவே, துமிந்த சில்வாவுக்கு விசேட வசதிகள் எதுவும் வழங்கப்படாது என சிறைச்சாலை ஆணையாளர் காமினி பி. திஸநாயக்க தெரிவித்துள்ளார். (ஐ)

# மைத்திரியிடம் விசாரணை

கொழும்பு, ஏப். 09

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் சுமார் 3 மணி நேரம் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

ஜனாதிபதி நிதியத்தில் இருந்து நிதியை பெற்றுக் கொண்ட விவகாரம் தொடர்பில் நேற்று முன்தினம் அவர் சி. ஐ. டிக்கு அழைக்கப்பட்டார்.

இதைத் தொடர்ந்து சுமார் 3 மணி நேரம் அவரிடம் சி. ஐ. டியினர் வாக்குமூலத்தை பதிவு செய்தனர். (ஐ)

# ஹிக்கடுவை துப்பாக்கிச்சூடு சந்தேகநபர் ஒருவர் கைது!

கொழும்பு, ஏப். 09

ஹிக்கடுவையில் இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டு சம்பவம் தொடர்பில் சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

காலி - ஹிக்கடுவை - குமாரகந்த பிரதேசத்தில் கடந்த 3ஆம் திகதி இரவு இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டில் ஆண் ஒருவர் கொல்லப்பட்டார். பெண் ஒருவர் காயமடைந்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் விசாரணை நடத்தி வரும் ஹிக்கடுவை பொலிஸார் நேற்று முன்தினம் கினிமெல்லகமஹ பகுதியில் வைத்து சந்தேகநபர் ஒருவரை கைது செய்தனர். கைதான சந்தேக நபர் கோன பீனுவல பகுதியைச் சேர்ந்த 23 வயது இளைஞரா வார். ஹிக்கடுவை பொலிஸார் அவரிடம் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# பாராளுமன்ற சொகுசு வாகனங்களை வாங்குவதற்கு எவரும் முன்வரவில்லை!

கொழும்பு, ஏப். 09

விற்பனைக்கு கேள்வி கோரப்பட்ட பாராளுமன்ற சொகுசு வாகனங்களை வாங்குவதற்கு இதுவரை பொருத்தமான கொள்வனவாளர்கள் எவரும் முன்வரவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

பல கொள்வனவாளர்கள் முன்வந்திருந்தாலும் அவர்கள் அனைவரும் மதிப்பிடப்பட்ட விலையைவிடக் குறைந்த விலையிலேயே கோரியுள்ளனர் என்றும் கூறப்படுகிறது.

மதிப்பிடப்பட்ட விலையில் வாகனங்களை வாங்க எவரும் முன்வரவில்லை என்றால், மீண்டும் கேள்வி கோரலுக்கு விடப்பட வேண்டியிருக்கும் என்று தெரிவிக்கப்படுகிறது.

பாராளுமன்ற அவைத் தலைவரின் செயலகத்துக்கு சொந்தமான இரண்டு வி8, மிசுபிஷி மொன்டெரோ ஜீப்களை விற்பனை செய்வதற்கே கேள்வி கோரல் விடப்பட்டுள்ளது.

இதேவேளை, பாராளுமன்றத்தில் உள்ள மற்ற சொகுசு வாகனங்களும் வரும் நாட்களில் ஏலம் விடப்படவுள்ளன. பாராளுமன்றத்தில் பேருந்துகள் உட்பட சுமார் 100 வாகனங்கள் உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# முன்னாள் அமைச்சர்கள்மீது விரைவில் சட்ட நடவடிக்கை?

கொழும்பு, ஏப். 09

முன்னாள் சிரேஷ்ட அமைச்சர்கள் மற்றும் இராஜாங்க அமைச்சர்கள் பலருக்கு எதிராகக் குற்றப்பத்திரங்களை தாக்கல் செய்ய சட்டமா அதிபர் திணைக்களம் நடவடிக்கை எடுத்து வருவதாகத் தெரிய வருகிறது. முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக் வெலவுக்கு எதிராக தாக்கல் செய்யப்படவுள்ள முக்கிய வழக்கு, அடுத்த சில நாட்களில் தாக்கல் செய்யப்படும் என்றும் அறிய வருகிறது. இது இம்யூ னோகுளோபுலின் மருந்தை இறக்குமதி செய்வதில் செய்யப் பட்ட மோசடியுடன் தொடர்பு டையது.

இதேநேரம், குற்றப்புலனாய்வு துறை, இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழு ஆகியவை மற்ற மூன்று முன்னாள் அமைச்சரவை அமைச்சர்கள் மற்றும் 5 இராஜாங்க அமைச்சர்கள்மீது குற்றச்சாட்டுகளை பதிவு செய்ய விசாரணைகளை தொடங்கியுள்ளன.

முன்னாள் அரச அதிகாரிகள் பலருக்கு எதிராகவும் விசாரணைகள் தொடங்கப்பட்டுள்ளன. ஜனாதிபதி நிதியிலிருந்து பணம் பெற்ற அரசியல்வாதிகள் குறித்து தற்போது தனி விசாரணை நடைபெற்று வருகிறது. இந்த வழக்குகளை விரைவுபடுத் துமாறு சட்டமா அதிபர் தனது மூத்த அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது. (ஐ)

# உத்தியோகபூர்வ கையிருப்பு 651 கோடி டொலராக உயர்வு!

கொழும்பு, ஏப். 09

நாட்டின் உத்தியோகபூர்வ கையிருப்பு சொத்துகள் கடந்த மார்ச் மாதத்தில் 7.1 வீதமாக உயர்ந்து 651 கோடி அமெரிக்க டொலர்களாக அதிகரித்துள்ளது என்று இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

இது பெப்ரவரியில் 609.5 கோடி அமெரிக்க டொலர்களாக இருந்ததிலிருந்து குறிப்பிடத்தக்க உயர்வை காட்டுகிறது என்று இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது.

இந்த உயர்வு, வெளிநாட்டு நாணய இருப்புகளில் ஏற்பட்ட முன்னேற்றத்தால் ஏற்பட்டுள்ளது. குறிப்பாக, வெளிநாட்டு நாணய இருப்புகள் பெப்ரவரியில் 603.1 கோடி அமெரிக்க டொலர்களாக இருந்த நிலையில், மார்ச்சில் இது மேலும் அதிகரித்து, உத்தியோகபூர்வ இருப்பு சொத்துகளை வலுப்படுத்தியுள்ளது.

இந்த இருப்பு சொத்துக்களில் சீன மக்கள் வங்கியிடமிருந்து பெறப்பட்ட சுமார் 140 கோடி அமெரிக்க டொலர் மதிப்பிலான பரிமாற்ற வசதியும் அடங்கியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# கொழும்பு துறைமுக மேற்கு முனையத்தின் பணி ஆரம்பம்!

கொழும்பு, ஏப். 09

கொழும்பு துறைமுகத்தின் மேற்கு சர்வதேச முனையம் அதன் பணிகளை ஆரம்பித்திருப்பதாக அதானி துறைமுகங்கள் மற்றும் விசேட பொருளாதார வலயங்கள் நிறுவனம் (அதானி போர்ட்ஸ் அன்ட் ஸ்பெஷல் எக்கனொமிக் ஸோன் லிமிடெட்) அறிவித்துள்ளது.


இது குறித்து கொழும்பு துறைமுக மேற்கு முனைய அபிவிருத்தியை அரச - தனியார் கூட்டிணைவின் அடிப்படையில் இணைந்து முன்னெடுத்திருக்கும் அதானி நிறுவனம், இலங்கையின் ஜோன் கீல்ஸ் நிறுவனத்தின் செஸ் லிமிடெட் என்பன வெளியிட்டிருக்கும் அறிக்கையில் இந்த அபிவிருத்தித் திட்டத்துக்கென 80 கோடி டொலர்கள் முதலீடு செய்யப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, கொழும்பு மேற்கு சர்வதேச முனையத்தின் பணிகள் ஆரம்பிக்கப்பட்டிருப்பதானது இந்தியா, இலங்கைக்கு இடையிலான பிராந்திய ஒத்துழைப்பின் ஒரு மைல்கல் என்று அதானி குழுமத்தின் தலைவர் கௌதம் அதானி தெரிவித்துள்ளார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்முனை பஸ் தரிப்பிடத்தில் சமூக சீர்கேடுகள் அதிகரிப்பு!

## நடவடிக்கை எடுப்பது யார்? மக்கள் கேள்வி



கல்முனை, ஏப். 09

**அம்பாறை மாவட்டம், கல்முனை மத்திய பஸ் தரிப்பு நிலையத்தை புனரமைப்புச் செய்யுமாறு பயணிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். அத்தோடு, இந்த பஸ் தரிப்பிடத்தில் சமூகச் சீர்கேடுகள் அதிகரித்துள்ளன என்றும் மக்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.**

அம்பாறை மாவட்டத்தில் முக்கிய வர்த்தக கேந்திர நிலையமாகக் காணப்படுகின்ற கல்முனை மாநகரத்தில் அமைந்துள்ள இந்த பஸ் தரிப்பு நிலையம் நீண்ட காலமாக புனரமைப்புச் செய்யப்படாமல் கவனிப்பாரற்ற நிலையில் காணப்படுவதால் பயணிகளும் வாகனச் சாரதிகளும் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.


பஸ் தரிப்பு நிலையக் கட்டடமும் மோசமான நிலையில் காணப்படுவதோடு, துர்நாற்றம் வீசுவதாகவும்,பயணிகள் சுட்டிக்காட்டியுள்ளனர். கல்முனை பஸ்தரிப்பு நிலையத்திலிருந்து கொழும்பு, யாழ்ப்பாணம், புத்தளம், மன்னார், குருநாகல், கட்டுநாயக்க விமான நிலையம் ஆகிய இடங்களுக்கு நாளாந்தம் பஸ் சேவைகள் இடம்பெறுகின்றன.

நீண்ட தூரம் பிரயாணம் செய்யவரும் பயணிகள் தங்குவதற்கும் குறிப்பாக அமர்ந்து கொள்வதற்கான வசதிகளும் இல்லை. எனவே, இந்த பஸ் தரிப்பு நிலையத்தை சகல வசதிகளுடன் கூடிய பஸ் தரிப்பு நிலையமாக புனரமைத்துத் தருமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

பேருந்து நிலையத்தின் மேல் கட்டடத்தில் பல்வேறு துர்நடத்தைகளுக்கான அடையாளங்கள் காணப்படுகின்றன. கல்முனை பிராந்திய சுகாதார பணிமனை, கல்முனை தலைமையக பொலிஸ் நிலையம், கல்முனை மாநகர சபை ஆகியவற்றுக்கு அருகாமையில் உள்ள இப்பேருந்து நிலையத்தில் இவ்வாறு நிலைமை காணப்படுவது துரதிஷ்ட வசமாகும். அதுமாத்திரமன்றி உரிய பாதுகாப்பு வசதிகள் இன்மையால் இவ்வாறான பிரச்னைகள் ஏற்படுகின்றன. இது தவிர இக்கட்டட கூரைகள் பயணிகள் மீது இடிந்து விழும் நிலையில் காணப்படுகின்றன.

மேலும், பேருந்து நிலையத்தின் மேல் கட்டடத்தில் நீண்ட காலமாக புறாக்கள் காணப்படுவதனால் ஒரு சரணாலயமாக காணப்படுவதாகவும் அதன் எச்சங்கள் நிறைந்த இக்கட்டடத்தில் துர்நாற்றம் வீசுவதாகவும் குற்றச்சாட்டு முன்வைக்கப் பட்டுள்ளது.

(எ- 01)



# கல்முனை பஸ் நிலையத்தின் புனரமைப்பு குறித்து ஆராய்வு

கல்முனை, ஏப். 09

போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்கவின் பணிப்பின் பேரில் போக்குவரத்து அமைச்சின் மேலதிக செயலாளர் வி. ஜெகதீசன் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் அபூபக்கர் ஆதம்பாவா இணைந்து கல்முனை இ. போ. ச. சாலையின் புனரமைப்பு குறித்து ஆராய்ந்தனர்.

நேற்று முன்தினம் திங்கட்கிழமை மாலை கல்முனை பஸ் நிலையத்தையும் கிளீன் சிறீலங்கா வேலைத்திட்டத்தின் மூலம் சீர் செய்வது பற்றியும் பொலிஸ் பாதுகாப்பு வழங்குவது பற்றியும் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

(எ-01- 07)

# வீடொன்றில் திடீரென தீ விபத்து பெறுமதியான பொருட்கள் நாசம்

கல்முனை, ஏப். 09

வீடொன்றில் ஏற்பட்ட தீ விபத்தில் பெறுமதியான பொருட்கள் எரிந்து சாம்பலாகின.

அம்பாறை மாவட்டம் கல்முனை மாநகர சபை எல்லைக்குட்பட்ட கல்முனைக்குடி 12 பகுதியில் பழைய தபால் நிலைய வீதியில் உள்ள வீடு ஒன்றில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை மாலை தீ விபத்து ஏற்பட்டது.

திடீரென ஏற்பட்ட தீ காரணமாக வீட்டில் இருந்தவர்கள் அலறிலடித்து அபாய உதவி கோரினர். உடனடியாக வீட்டின் அருகில் நின்ற இளைஞர்கள், தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர்.

இதேவேளை, மாநகர சபையின் தீ அணைப்பு பிரிவினருக்கு அழைப்பை ஏற்படுத்திய போதிலும் உரிய இடத்துக்கு வருகை தரவில்லை என மக்கள் விசனம் தெரிவித்தனர். மேலும், அங்கு வருகை தந்த இலங்கை மின்சார சபையினர் மின் ஒழுக்கினால் தீ விபத்து ஏற்பட்டது தெரிவித்தனர். அத்தோடு, விபத்து ஏற்பட்ட பகுதியை சீர் செய்தனர்.

(எ)



# கூட்டுறவு சங்கத்துக்கு களக்கற்றல் பயணம்

சம்மாந்துறை, ஏப். 09

ஆலையடிவேம்பு பலநோக்கு கூட்டுறவு சங்கத்தின் பணியாளர்கள் நேற்று முன்தினம் திங்கட்கிழமை சம்மாந்துறை அல்-மஸ்ரபுல் இஸ்லாமிய்யு சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கத்துக்கு களக்கற்றல் பயணம் மேற்கொண்டனர்.

அல்-மஸ்ரபுல் இஸ்லாமிய்யு சிக்கன கடனுதவு கூட்டுறவு சங்கமானது 24 ஆயிரம் அங்கத்தவர்களுக்கு ஆறு கிளைகள் ஊடாக கடனுதவி சேவையை வழங்கி வருகின்றது. “வட்டி இல்லாத பொருளாதாரம் அருள் நிறைந்த எதிர்காலம்” எனும் தொனிப்பொருளில் இந்தக் கடன் திட்டம் முன்னெடுக்கப் படுகிறது.

இந்த சிக்கன கடனுதவு கூட்டுறவு சங்கத்தால் முன்னெடுக்கப்படும் நகைக் கடன் சேவை மற்றும் டிஜிற்றல் நடவடிக்கைகளை ஆலையடிவேம்பு பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் கிராமிய வங்கியினூடாக முன்னெடுப்பது தொடர்பான சாத்தியங்களை கண்டறிவதே இந்தக் களக்கற்றல் பயணத்தின் நோக்கமாகும்.

இக்களக்கற்றல் பயணத்தில் ஆலையடிவேம்பு பலநோக்கு கூட்டுறவு சங்கத்துக்கு பொறுப்பான கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ். ஜாபீர், அல்-மஸ்ரபுல் இஸ்லாமிய்யு சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் ஓய்வுநிலை அதிபர் ஐ.எம்.இப்றாஹிம், ஆலையடிவேம்பு பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் நா. ஏரம்பமூர்த்தி, சங்கத்தின் பொது முகாமையாளர் மற்றும் பணியாளர்களும் பங்கேற்றனர்.

(எ)


# சம்பியனானது அல் - ஹிரா அணி

கிண்ணியா, ஏப்.09

கிண்ணியா அல்-ஹிரா அணி, 4ஆவது முறையாகவும் சம்பியனானது.

பெண்களுக்கு இடையிலான வலய மட்ட எல்லே போட்டி நேற்று முன்தினம் திருகோணமலை கிண்ணியா ரேஞ்சர்ஸ் விளையாட்டு மைதானத்தில் ஆரம்பமானது.

இந்த போட்டியில் கிண்ணியா வலயத்துக்குட்பட்ட 14 பாடசாலை அணிகள் பங்குபற்றின. இப்போட்டியில் இறுதிப் போட்டிக்கு கிண்ணியா அல்-ஹிரா மகா வித்தியாலயம் மற்றும் கிண்ணியா அலிகார் வித்தியாலய பாடசாலை அணிகள் தெரிவு செய்யப்பட்டன.



இவ் இறுதிப்போட்டியில் முதலில் ஆடிய அல்-ஹிரா அணி 25 பந்துகளை எதிர்கொண்டு 8 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது. பதிலுக்கு ஆடிய அலிகார் அணி 25 பந்துகளை சந்தித்து ஓர் ஓட்டத்தை மாத்திரம் பெற்று தோல்வியைத் தழுவியது.

இப் போட்டியில் வெற்றியீட்டிய அல்-ஹிரா அணி நான்காவது முறையாகவும் சம்பியனாக தெரிவு செய்யப்பட்டதையடுத்து இறுதிப்போட்டியில் விளையாடிய குறித்த இரண்டு அணிகளும் மாகாண மட்டப் போட்டிக்கு தெரிவு செய்யப் பட்டன.

(எ)

# சுவரொட்டிகளை ஒட்டிய மூவர் ஏறாவூரில் கைது!

## நூற்றுக்கணக்கான சுவரொட்டிகள் மீட்பு

மட்டக்களப்பு, ஏப். 09

மட்டக்களப்பு ஏறாவூர் பிரதேசத்தில் வீதிகளில் தேர்தல் பிரசார சுவரொட்டிகளை ஒட்டிக்கொண்டிருந்த சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் ஆதரவாளர்கள் 3 பேரை நேற்று அதிகாலை கைது செய்ததுடன் அவர்களிடமிருந்து 151 சுவரொட்டிகளை மீட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த பிரதேசத்தில் வீதிகளில் சுவரொட்டிகளை ஒட்டுவதாக பொலிஸாருக்கு கிடைத்த தகவல் ஒன்றையடுத்து அங்கு சென்ற பொலிஸார் சுவரொட்டிகளை ஒட்டிக் கொண்டிருந்த 3 பேரை கைது செய்ததுடன் அவர்களிடமிருந்து 151 சுவரொட்டிகளை மீட்டுள்ளனர்.

இந்த நிலையில், கைது செய்யப்பட்டவர்களை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

(எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ட்ரம்பின் வரி விதிப்பால் சர்வதேச பொருளாதார மந்தநிலை அபாயம்

## இஸ்ரேல் மீது வரி விதிப்பு இல்லை



வாஷிங்டன், ஏப். 09


**அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் வரி விதிப்பால் சர்வதேச பொருளாதார மந்தநிலை உருவாகும் அபாயம் ஏற்பட்டுள்ளது. இந்த நிலையில், இஸ்ரேல் மீது வரி விதிப்பு கிடையாது என்று ட்ரம்ப் அறிவித்துள்ளார்.**

அமெரிக்க ஜனாதிபதியாக ட்ரம்ப் பதவியேற்ற பிறகு, அதிரடி அறிவிப்புகளை வெளியிட்டு வருகிறார். கடந்த 2ஆம் திகதி இலங்கை, இந்தியா உட்பட பல்வேறு உலக நாடுகளுக்கு பரஸ்பர வரி அறிவித்தார். இலங்கைப் பொருட்களுக்கு 44 சதவீதமும் இந்தியப் பொருட்களுக்கு 26 சதவீத வரியும் விதிக்கப்பட்டது.

அமெரிக்காவின் இந்த நடவடிக்கைக்கு சீனா பதிலடி கொடுத்தது. அமெரிக்கப் பொருட்கள் மீது 34 சதவீத வரி விதித்தது. இதுபோன்று, கனடாவும் பதிலடி கொடுக்கத் திட்டமிட்டுள்ளது. இதனால், உலக வர்த்தகப் போர் வெடிக்கும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. மேலும், சர்வதேச பொருளாதார மந்தநிலை உருவாகும் அபாயமும் ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையில், இஸ்ரேல் மீது வரி விதிப்பு இல்லை என்று ட்ரம்ப் அறிவித்துள்ளார். இஸ்ரேல் போரில் ஈடுபட்டு வருவதால், அந்த நாட்டுக்கு மட்டும் வரி விதிப்பு கிடையாது என்று தெரிவித்துள்ளார். மேலும், வெள்ளை மாளிகையில் ட்ரம்பை இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகு நேற்று முன்தினம் சந்தித்து பேசியுள்ளார். (எ)

# ஆளுநரின் செயல் சட்டவிரோதம்



புதுடில்லி, ஏப். 09

சட்டங்களை தமிழக ஆளுநர் நிறுத்தி வைத்தது சட்டவிரோதம் என்று உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

தமிழக ஆளுநர் ஆர். என். ரவிக்கும், தமிழக அரசுக்கும் இடையே மோதல் நீடித்து வருகிறது. குறிப்பாக சட்டசபையில் நிறைவேற்றப்படும் சட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்காமல் ஆளுநர் திட்டமிட்டு கிடப்பில் போட்டு வருவதாக ஆளும் கட்சியினர் குற்றஞ்சாட்டினர்.

இந்த நிலையில், சட்டங்கள், துணைவேந்தர்கள் நியமனத்துக்கு ஒப்புதல் அளிக்கும் விவகாரத்தில் ஆளுநருக்கு உத்தரவிடக்கோரி தமிழக அரசு தாக்கல் செய்த ரிட் மனு மீது இந்திய உயர் நீதிமன்றம் நேற்றுத் தீர்ப்பளித்துள்ளது.

ஆளுநர் ஆர். என். ரவி அவருக்கான அதிகாரத்தின்படி நடந்து கொள்ளவில்லை. ஆளுநருக்கு என தனிப்பட்ட அதிகாரம் இல்லை. பொதுவான விதியின் படி, மாநில அரசின் ஆலோசனைகள் மற்றும் பரிந்துரையின்படியே ஆளுநர் செயல்பட முடியும். ஆளுநர் தனது விருப்பப்படி செயல்பட முடியாது, அதற்கு அரசமைப்பு இடமளிக்கவில்லை.

தமிழக சட்டசபையில் 2ஆவது முறையாக நிறைவேற்றப்பட்ட 10 சட்டங்களை ஆளுநர் நிறுத்தி வைத்தது சட்டவிரோதம். அதை ஜனாதிபதிக்கு அனுப்பியதும் செல்லாது. சட்டசபையில் மீண்டும் நிறைவேற்றப்பட்ட சட்டங்கள் மீதான ஆளுநரின் செயல்பாடு ஏற்புடையதல்ல. ஒப்புதல் வழங்குவது, ஒப்புதலை நிறுத்தி வைப்பது உள்ளிட்ட பிரிவுகளை முக்கியமாக கருத்தில் கொள்ள வேண்டும் என்று தீர்ப்பில் கூறப்பட்டுள்ளது. (எ)

# "வர்த்தக பற்றாக்குறையை இஸ்ரேல் நிச்சயம் நீக்கும்"

வாஷிங்டன், ஏப். 09

அமெரிக்காவுடனான வர்த்தகப் பற்றாக்குறையை நாங்கள் நிச்சயம் நீக்குவோம் என்று இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு தெரிவித்தார்.

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்புடன் இணைந்து நேற்று முன்தினம் வெள்ளை மாளிகையில் செய்தியாளர்களைச் சந்தித்தபோதே நெதன்யாகு மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் கூறுகையில்,

"என்னை மீண்டும் ஒருமுறை வெள்ளை மாளிகைக்கு அழைத்ததற்காக ஜனாதிபதிக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். அவர் ஒரு குறிப்பிடத்தக்க நண்பர். அவர் எங்கள் கூட்டணியின் சிறந்த ஆதரவாளர், மேலும், அவர் சொல்வதைச் செய்கிறார்.

அமெரிக்காவுடனான வர்த்தகப் பற்றாக்குறையை நாங்கள் நீக்குவோம். அதை மிக விரைவாகச் செய்ய நாங்கள் விரும்புகிறோம். இது சரியான செயல் என்று நாங்கள் நினைக்கிறோம், மேலும், இஸ்ரேல் பல நாடுகளுக்கு ஒரு முன்மாதிரியாகச் செயல்பட முடியும் என்று நான் நினைக்கிறேன்"- என்றார். (எ)

# 14 நாடுகளின் வீசாக்களுக்கு சவூதி அரேபியா தடை விதிப்பு

ரியாத், ஏப். 09

இந்தியா உட்பட 14 நாடுகளின் விசாக்களுக்கு சவுதி அரேபியா தற்காலிக தடை விதித்துள்ளது.

2025ஆம் ஆண்டுக்கான ஹஜ் புனித யாத்திரை ஜூன் 4ஆம் திகதி முதல் 9ஆம் திகதி வரை நடைபெறுகிறது. இந்த நிலையில், இந்தியா உட்பட 14 நாடுகளுக்கான விசாக்களுக்கு சவுதி அரேபிய அரசு தற்காலிகத் தடை விதித்துள்ளது. இதன்படி இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ், எகிப்து, இந்தோனேஷியா, ஈராக், நைஜீரியா, ஜோர்தான், அல்ஜீரியா, சூடான், எதியோப்பியா, துனிசியா, ஏமன் மற்றும் மொராக்கோ ஆகிய நாடுகளைச் சேர்ந்த ஹஜ் புனித யாத்திரை செல்பவர்களுக்கு இந்தத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

சவுதி அரேபியாவில் 2024ஆம் ஆண்டு ஹஜ் புனித யாத்திரையின்போது, 1,200 பக்தர்கள் உயிரிழந்தனர். அதிக வெப்பம் காரணமாக மக்கள் மரணித்தனர்.

வெளிநாட்டினர் பலரும் உம்ரா விசாக்கள் அல்லது வருகைக்கான விசாக்களுடன் கடந்த காலங்களில் சவுதி அரேபியாவுக்குள் நுழைந்து, அதிகாரபூர்வ அங்கீகாரமின்றி கூடுதலான நாட்கள் தங்கி, சட்டவிரோத வகையில் ஹஜ் புனித யாத்திரையில் பங்கேற்றனர்.

இதுபோன்று முறையான பதிவு செய்யாமல் ஹஜ் புனித யாத்திரை மேற்கொள்ளும் தனி நபர்களை தடுப்பதற்காக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று விசா தடை விதிப்புக்கு சவுதி அரேபிய அரசு விளக்கமளித்துள்ளது. (எ)

# சீன பொருட்களுக்கு 50 வீதம் வரி

## அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் எச்சரிக்கை

வாஷிங்டன், ஏப். 09

சீனப் பொருட்களுக்கு 50 சதவீதம் வரி விதிக்கப்படும் என்று அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் எச்சரித்துள்ளார்.

அமெரிக்கா கடந்த 2ஆம் திகதி இலங்கை, இந்தியா, சீனா உள்ளிட்ட நாடுகளுக்கு கூடுதல் வரி விதித்து அறிவிப்பு வெளியிட்டது. இலங்கை பொருட்களுக்கு 44 சதவீதமும் இந்திய பொருட்களுக்கு 26 சதவீதமும், சீனப் பொருட்களுக்கு கூடுதலாக 34 சதவீதமும் வரி விதிக்கப்பட்டது. இதன்மூலம், சீனப் பொருட்களுக்கான வரி 54 சதவீதமாக உயர்ந்தது.

பல்வேறு நாடுகளும், தங்கள் நாட்டு பொருட்களுக்கு விதிக்கப்பட்ட கூடுதல் வரிகளுக்காக அமெரிக்காவுக்கு கண்டனம் தெரிவித்தன. உலக அளவில் வர்த்தகப் போருக்கு வழிவகுக்கும் என்று எச்சரித்தன.

இந்த நிலையில் அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப், இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவுடன் இணைந்து நேற்று முன்தினம் வெள்ளை மாளிகையில் செய்தியாளர்களைச் சந்தித்தார்.

இதன்போ ட்ரம்ப் கூறுகையில், எங்களுடன் ஒப்பந்தங்கள், பேச்சுகளை நடத்த வேண்டிய பல நாடுகள் உள்ளன. மேலும், அவை நியாயமான ஒப்பந்தங்களாக இருக்கப் போகின்றன. சில சந்தர்ப்பங்களில், அவை கணிசமான வரிகளைச் செலுத்தப்போகின்றன.

அவை நியாயமான ஒப்பந்தங்களாக இருக்கும். எனது அறிக்கைக்கு எதிராக, சீனா ஏற்கனவே இருந்த அபத்தமான கட்டணங்களை விட 34 சதவீத வரியை விதித்தனர். அந்த வரி நீக்கப்படாவிட்டால், நாங்கள் விதித்த கட்டணங்களை விட 50 சதவீதத்தை விதிக்கிறோம் என்று நான் சொன்னேன்.

முன்பு வெள்ளை மாளிகையில் இருந்தவர்களால் அவர்கள் ஒரு பணக்கார நாடாக மாறிவிட்டனர். சீன ஜனாதிபதியுடன் எனக்கு ஒரு சிறந்த உறவு உள்ளது. அது அப்படியே இருக்கும் என்று நம்புகிறேன். சீனா மீது எனக்கு மிகுந்த மரியாதை உண்டு.

அவர்கள் நமது அமைப்புக்கு என்ன செய்தார்கள் என்பது உங்களுக்குத் தெரியும். நமக்கு 36 ட்ரில்லியன் டொலர்கள் கடன் உள்ளது. எனவே, நாங்கள் சீனாவுடன் பேசுவோம். நாங்கள் பல நாடுகளுடனும் பேசுவோம்.

அது நிரந்தர வரிகளாக இருக்கலாம், பேச்சுவார்த்தைகளாகவும் இருக்கலாம். ஒவ்வொரு நாட்டுடனும் நாம் நியாயமான ஒப்பந்தங்களையும் நல்ல ஒப்பந்தங்களையும் பெறப் போகிறோம். நாம் அவ்வாறு செய்யாவிட்டால், அவற்றுடன் நமக்கு எந்த தொடர்பும் இருக்காது- என்றார். (எ)

# கச்சதீவு யார் ஆட்சியில் தாரைவார்க்கப்பட்டது?



சென்னை, ஏப். 09

கச்சதீவு தி.மு.க. ஆட்சியில் தாரைவார்க்கப்பட்டதை முதலமைச்சர் மறைக்கிறார் என்று எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிச்சாமி தெரிவித்தார்.

இந்தியாவின் தமிழக சட்டசபையில் நேற்று முன்தினம் அரசு மதுக்கடை (டாஸ்மாக்) விவகாரம் குறித்து பேச எடப்பாடி பழனிச்சாமி முயற்சித்தார். அப்போது, பழனிச்சாமி பேசுவதை அவைக்குறிப்பில் பதிவேற்ற முடியாது என்று சபாநாயகர் அப்பாவு தெரிவித்தார். இதனால், கோபமடைந்த பழனிச்சாமி, வேறு எதைத்தான் பதிவு செய்வீர்கள் என கேள்வியெழுப்பியதுடன், எதையுமே பேச விடுவதில்லை என தெரிவித்தார். இதனைத் தொடர்ந்து அ.தி.மு.க. எம். எல். ஏக்கள் கடும் அமளியில் ஈடுபட்டதுடன், சட்டசபையை விட்டு வெளியேறினர்.

இதனைத் தொடர்ந்து எதிர்க்கட்சித் தலைவர் பழனிச்சாமி செய்தியாளர்களைச் சந்தித்தார். அப்போது அவர் கூறுகையில்,

"கச்சதீவு யார் ஆட்சியில் தாரைவார்க்கப்பட்டது. கச்சதீவு தி.மு.க. ஆட்சியில் தாரைவார்க்கப்பட்டது. அதை முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் மறைக்கப் பார்க்கிறார். நீட் பரீட்சையை கொண்டு வந்ததும் தி.மு.க. - காங்கிரஸ் ஆட்சிதான்"- என்றார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 12 ஓட்டங்கள் வித்தியாசத்தில் ஆர். சி. பி. போராடி வெற்றி!

மும்பை, ஏப். 09

மும்பை அணிக்கு எதிரான போட்டியில் 12 ஓட்டங்கள் வித்தியாசத்தில் பெங்களூரு (ஆர்.சி.பி.) அணி வெற்றி பெற்றது.

18ஆவது ஐ. பி. எல். கிரிக்கெட் தொடரில் நேற்று முன்தினம் நடைபெற்ற லீக் ஆட்டத்தில் மும்பை இந்தியன்ஸ் - றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூரு அணிகள் மோதின. வான்கடே மைதானத்தில் நடைபெற்ற இந்த ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய பெங்களூரு அணி வலுவான நிலையை எட்டியது. சிறப்பாக ஆடி வந்த விராட் கோலி 67 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார்.

அதிரடியாக விளையாடிய ரஜத் பட்டிதார் 64 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். இறுதி கட்டத்தில் ஜிதேஷ் சர்மா (40 ஓட்டங்கள்) அதிரடியாக விளையாடி பெங்களூரு அணி 200 ஓட்டங்களை கடக்க உதவினார். பின்னர் நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் முடிவில் பெங்களூரு அணி 5 விக்கெட்களை இழந்து 221 ஓட்டங்கள் குவித்தது.

இதனையடுத்து 222 ஓட்டங்கள் அடித்தால் வெற்றி என்ற இமாலய இலக்கை நோக்கி களமிறங்கிய மும்பை அணிக்கு ஆரம்பம் அதிர்ச்சியாக அமைந்தது. இருப்பினும் திலக் வர்மாவுடன், அணித் தலைவர் ஹர்திக் பாண்டியா ஜோடி சேர்ந்தார். இந்த ஜோடி காட்டிய அதிரடியில் பெங்களூரு அணி பந்துவீச்சாளர்கள் மிரண்டு போயினர். தொடர்ந்து அதிரடி காட்டிய திலக் வர்மா தனது அரைச் சதத்தை பூர்த்தி செய்து அசத்தினார்.

இந்த நிலையில் புவனேஸ்வர் குமார் பந்துவீச்சில் திலக் வர்மா 56 (28) ஓட்டங்களில் வெளியேறினார். மறுமுனையில் அதிரடி காட்டி வந்த ஹர்திக் பாண்டியா 42 (15) ஓட்டங்களில் ஆட்டமிழந்தார்.

கடைசி ஓவரில் மும்பை அணி வெற்றிக்கு 19 ஓட்டங்கள் தேவைப்பட்ட நிலையில், முதல் பந்தில் சாண்டனர் 8 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். இரண்டாவது பந்தில் தீபக் சாஹரும் அடுத்ததாக நமர் திர் 11 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார்.

இதனால், மும்பை அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் 9 விக்கெட்களை இழந்து 209 ஓட்டங்கள் மட்டுமே எடுத்தது. பெங்களூரு அணியின் சார்பில் குர்ணால் பாண்டியா 4 விக்கெட்கள் வீழ்த்தினார்.

இதன்மூலம் 12 ஓட்டங்கள் வித்தியாசத்தில் பெங்களூரு அணி வெற்றி பெற்றது. (எ)



# 13 ஆயிரம் ஓட்டங்கள் கோலி உலக சாதனை

மும்பை, ஏப். 09

ஐ. பி. எல். தொடரில் மும்பைக்கு எதிரான போட்டியின்போது இந்திய வீரராக விராட் கோலி உலக சாதனை படைத்துள்ளார்.

18ஆவது ஐ. பி. எல். கிரிக்கெட் தொடரில் நேற்று முன்தினம் நடைபெற்ற லீக் ஆட்டத்தில் மும்பை இந்தியன்ஸ் - றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூரு அணிகள் மோதின.

இந்த ஆட்டத்தில் விராட் கோலி 18 ஓட்டங்கள் அடித்திருந்தபோது ரி- 20 கிரிக்கெட்டில் 13 ஆயிரம் ஓட்டங்களை கடந்தார். இதன் மூலம் ரி - 20 கிரிக்கெட் வரலாற்றில் 13 ஆயிரம் ஓட்டங்கள் அடித்த முதல் இந்திய வீரர் என்ற உலக சாதனையை படைத்துள்ளார்.


ஒட்டு மொத்தத்தில் 13 ஆயிரம் ஓட்டங்களை கடந்த 5ஆவது வீரராகவும் விராட் கோலி சாதனை படைத்துள்ளார்.

அந்த பட்டியல் வருமாறு,

1. கிறிஸ் கெயில் - 14,562 ஓட்டங்கள்,
2. அலெக்ஸ் ஹேல்ஸ் - 13,610 ஓட்டங்கள்,
3. சொயப் மலிக் - 13,557 ஓட்டங்கள்,
4. கைரென் பொல்லார்ட் - 13,537 ஓட்டங்கள்,
5. விராட் கோலி - 13,041 ஓட்டங்கள்

எடுத்துள்ளார். (எ)





# அவுஸ்திரேலிய வீரர் 27 வயதிலேயே ஓய்வு

மெல்பேர்ன், ஏப். 09

அவுஸ்திரேலிய கிரிக்கெட் வீரர் வில் புகோவ்ஸ்கி 27 வயதில் ஓய்வை அறிவித்துள்ளார்.

அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணியில் இடம் பிடிப்பது மிகவும் கடினமானது.

ஆனால், அவுஸ்திரேலிய அணிக்காக 22 வயதிலேயே (2019 ஆண்டு இலங்கைக்கு எதிரான டெஸ்ட் தொடர்) அறிமுகமாகும் வாய்ப்பு இளம் வீரரான வில் புகோவ்ஸ்கிக்கு கிடைத்தது. 19 வயதுக்குட்பட்டோர் அணியிலிருந்தே அவுஸ்திரேலிய அணிக்காக விளையாடி வந்த அவர் கடந்த 2021ஆம் ஆண்டு சர்வதேச டெஸ்ட் கிரிக்கெட்டில் அறிமுகமாகி ஒரே ஒரு போட்டியில் மட்டும் விளையாடி 72 ஓட்டங்களை எடுத்தார்.

கிரிக்கெட் விளையாடும் போது அவரது தலையில் பந்து அடிக்கடி தாக்கியதன் காரணமாக அவர் அவ்வப்போது சிகிச்சை பெற்று வந்தார்.

இந்த நிலையில், சர்வதேச கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெறுவதாக வில் புகோவ்ஸ்கி நேற்று அறிவித்துள்ளார்.

# ஹர்திக் பாண்டியா மாபெரும் சாதனை

மும்பை, ஏப். 09

ரி - 20 கிரிக்கெட் போட்டியில் முதல் இந்திய வீரராக ஹர்திக் பாண்டியா மாபெரும் சாதனை படைத்துள்ளார்.

ஐ. பி. எல். தொடரில் மும்பை வான்கடே மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற லீக் ஆட்டத்தில் மும்பை இந்தியன்ஸ் - றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூரு அணிகள் மோதின. இதில், 12 ஓட்டங்கள் வித்தியாசத்தில் பெங்களூரு அணி வெற்றி பெற்றது.

இந்த நிலையில், ஹர்திக் பாண்டியா 2 விக்கெட்கள் வீழ்த்தியதன் மூலம் ரி - 20 கிரிக்கெட்டில் 200 விக்கெட்களை வீழ்த்திய வீரர்கள் பட்டியலில் இணைந்துள்ளார். மேலும், ரி - 20 கிரிக்கெட் வரலாற்றில் 5000 இற்கும் மேற்பட்ட ஓட்டங்கள் மற்றும் 200 விக்கெட்களை வீழ்த்தியவர்கள் பட்டியலில் முதல் இந்திய வீரராக இணைந்து சாதனை படைத்துள்ளார். (எ)



# சிம்பாவே அணி அறிவிப்பு

ஹராரே, ஏப்.09

பங்களாதேஷுக்கு எதிரான டெஸ்ட் தொடரில் விளையாடவுள்ள சிம்பாவே அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

சிம்பாவே கிரிக்கெட் அணி பங்களாதேஷில் சுற்றுப் பயணம் மேற்கொண்டு 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடவுள்ளது. இந்தத் தொடர் எதிர்வரும் 20ஆம் திகதி தொடங்குகிறது.

இந்த நிலையில், டெஸ்ட் தொடருக்கான சிம்பாவே அணி அறிவிக்கப்பட்டுள்ளது. கிரேக் எர்வின் அணித் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். இந்த அணியில் சிரேஷ்ட வீரரான சீன் வில்லியம்ஸூம் இடம் பிடித்துள்ளார். அணி விவரம் வருமாறு,

கிரேக் எர்வின் (தலைவர்), பிரைன் பென்னட், ஜோனதான் கேம்ப்பெல், பென் கர்ரன், டிரெவர் க்வாண்டு, வெஸ்லி மாதவரே, வெல்லிங்டன் மசகட்சா, வின்செண்ட் மசேகேசா, நியாஷா மாயவோ, பிளெஸ்சிங் முசரபானி, ரிச்சர்ட் ங்க்வாரா, விக்டர் நியாசி, தபத்ஸ்வா சிகா, நிக்கோலஸ் வெல்ச், சீன் வில்லியம்ஸ் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர். (எ)

# பாகிஸ்தான் அணிக்கு ஐ. சி. சி. மீள அபராதம்

டுபாய், ஏப். 09

பாகிஸ்தான் கிரிக்கெட் அணிக்கு ஐ. சி. சி. மீண்டும் அபராதம் விதித்துள்ளது.

பாகிஸ்தான் கிரிக்கெட் அணி அண்மையில் நியூசிலாந்துக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு 5 ரி - 20 மற்றும் 3 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடியது. இதில் ரி - 20 தொடரை 4-1 என்ற கணக்கிலும், ஒருநாள் தொடரை 3-0 என்ற கணக்கிலும் நியூசிலாந்து கைப்பற்றியது.

இதில் ரிஸ்வான் தலைமையிலான பாகிஸ்தான் ஒருநாள் கிரிக்கெட் அணி நியூசிலாந்துக்கு எதிரான முதல் இரு ஒருநாள் போட்டிகளில் மெதுவாக பந்து வீசியதற்காக அபராதம் விதிக்கப்பட்டது. இந்நிலையில், நியூசிலாந்துக்கு எதிரான 3ஆவது மற்றும் கடைசி ஒருநாள் போட்டியிலும் பாகிஸ்தான் மெதுவாக பந்து வீசியது கண்டறியப்பட்டுள்ளது. இதன் காரணமாக பாகிஸ்தான் அணிக்கு 5 சதவீதம் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

இதையடுத்து ஒருநாள் தொடரின் மூன்று போட்டிகளிலும் மெதுவாக பந்துவீசிய புகாரின் அடிப்படையில் பாகிஸ்தானுக்கு "ஹட்ரிக்" அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பயங்கரவாத...

உள்ள சட்டமாகும்.

எனவே, பயங்கரவாதத் தடைச் சட்டம் என்பது எமது விருப்பம் அல்லது விருப்பமின்மைக்கு அப்பால் குற்றங்களை தடுப்பதற்காக பயன்படுத்தப்படுவதாகும். அது நடைமுறையிலுள்ள சட்டதிட்டங்களுக்கு அமையவே பயன்படுத்தப்படுகிறது. அதற்காக மாத்திரமே இந்த சட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறதே அன்றி, இதனைத் தொடர்ந்தும் நடைமுறையில் வைத்திருப்பதற்கு நாம் எதிர்பார்க்கவில்லை.

எனவே, இந்த சட்டத்தை நீக்குவதற்கான முதலாவது சந்தர்ப்பம் கிடைக்கும்போது அப்போதே அதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படும். திட்டமிட்ட குற்றச் செயல்களில் ஈடுபடுபவர்கள், போதைப்பொருள் கடத்தல்காரர்கள், குறிப்பாக தேசிய பாதுகாப்புடன் தொடர்புடைய குற்றங்களின் போது இதனை நடைமுறைப்படுத்த வேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது - என்றும் அவர் கூறினார். (ஐ)

## 30ஆயிரம்...

விதந்துரைகளை சமர்ப்பிப்பதற்காக பிரதமரின் செயலாளர் தலைமையில் அதிகாரிகள் குழு அமைக்கப்பட்டது. இந்தக் குழுவின் விதந்துரைப்படி 18 ஆயிரத்து 853 ஆட்சேர்ப்புகளுக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இதற்கமைய, பொது நிர்வாக, உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சர் சமர்ப்பித்துள்ள யோசனையை கருத்தில் கொண்டு 2025 வரவு - செலவு திட்டத்தின் பிரகாரம் 30 ஆயிரம் பேர் அரச சேவையில் இணைக்கப்படுவர் - என்றும் பேச்சாளர் கூறினார். (ஐ)

## ராஜபக்ஷ...

சாணக்கியன் இராசமாணிக்கம் முன்வைத்த குற்றச்சாட்டுக்களை சுட்டிக்காட்டி உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"நான் இந்த பாராளுமன்ற உறுப்பினர் தொடர்பில் பல விடயங்களை குறிப்பிட்டேன். ஆனால், அவர் ரணில் விக்கிரமசிங்கவிடமிருந்து நிதி பெற்ற விடயத்தை மாத்திரம் குறிப்பிடுகிறார். மகிந்த ராஜபக்ஷவுடன் நாங்கள் 2006 - 2009 வரையான காலப்பகுதியில் ஒன்றிணைந்து செயல்படவில்லை. இது அரசியல் சத்தியம்.

தமிழ் அரசியல் கட்சி என்று குறிப்பிட்டுக்கொண்டு வடக்கு, கிழக்கு மாகாணங்களை இல்லாதொழித்தவர்களுடன் ஒன்றிணைந்துதான் இவர்கள் செயல்பட்டார்கள். இவர்கள் ராஜபக்ஷர்களுடன் ஒன்றிணைந்து 2012, 2013ஆம் ஆண்டுகளில் வாக்கு கோரினார். பிள்ளைகளை கடத்தி, கப்பம் பெற்ற பிள்ளையானின் மேடையிலும் இவர் இருந்துள்ளார்.

2005ஆம் ஆண்டு எதிர்க்கட்சியில் இருந்துகொண்டுதான் ராஜபக்ஷர்களுக்கு ஆதரவளித்தோம். இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் நிலைக்கு கவலையடைகிறேன். சபாநாயகரை இவர் மிகவும் கீழ்த்தரமான முறையில் விமர்சிக்கிறார். முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ரவிராஜ் இவ்வாறு முறையற்ற வகையில் செயல்படவில்லை. மூன்றாம் தரப்பு அரசியல்வாதி போல் செயல்படவில்லை.

2005ஆம் ஆண்டு ரணில் - சந்திரிகாவை தோற்கடிப்பதற்காகவே ராஜபக்ஷர்க்ளுக்கு ஆதரவளித்தோம். இதன் பின்னர் ராஜபக்ஷர்களுக்கு ஒத்துழைப்பு வழங்கவில்லை. வடக்கு, கிழக்கு மக்களை அழித்த ராஜபக்ஷர்களுக்கும், பிள்ளையானுக்கும் ஒத்துழைப்பு வழங்கியவர்கள் முன்வைக்கும் குற்றச்சாட்டுகள் அடிப்படையற்றவை - என்றார். (ஐ)

## புதுவருடத்...

கடந்த ஆண்டு டிசெம்பரில் நடைபெற்ற க. பொ. த. உயர்தர பரீட்சைக்கு 3 இலட்சத்து 33 ஆயிரத்து 183 மாணவர்கள் தோற்றியிருந்தனர். இவர்களில் 2 இலட்சத்து 53 ஆயிரத்து 390 மாணவர்கள் பாடசாலை ஊடாகவும் 79 ஆயிரத்து 793 பேர் தனிப்பட்ட ரீதியிலும் பரீட்சைக்கு தோற்றியிருந்தனர்.

கடந்த இரு மாதங்களில் விடைத்தாள் மதிப்பீட்டு பணிகள் நடைபெற்று வந்தன. இதற்கமைய ஓரிரு வாரங்களில் பெறுபேறுகளை வெளியிட எதிர்பார்த்துள்ளோம் - என்றார். (ஐ)

## பஸில்...

பொதுஜன பெரமுனவின் நிலைப்பாடுகளில் பல குறிப்பிடத்தக்க மாற்றங்கள் இடம்பெறும். இவை நாமல் ராஜபக்ஷவின் எதிர்கால அரசியல் திசையை தீர்மானிக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

நாடு திரும்பும் பஸில், அடுத்த ஜனாதிபதித் தேர்தலை இலக்காகக் கொண்டு கட்சியின் உறுப்பினர்களை ஒன்றிணைத்தல், வெளியேறியோர் அல்லது கட்சி செயல்பாட்டில் ஒதுங்கியிருப்போரை மீண்டும் இணைத்தல் உள்ளிட்ட விடயங்களை கையாள்வார் என்றும் கூறப்படுகிறது.

இதேவேளை, கடந்த தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவுடன் கூட்டணி அமைத்த பெரமுன கட்சியினர் மீண்டும் இணையத் தொடங்கி விட்டனர். இதன்படி, முன்னாள் சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்த்தன, முன்னாள் தென் மாகாண ஆளுநர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்த்தன, மாத்தறையின் முன்னாள் எம். பி. கருணா கொடித்துவக்கு, இரத்தினபுரியின் முன்னாள் எம். பி. அகில எல்லாவல, ஆகியோர் சமீபத்தில் மொட்டுக் கட்சியில் மீண்டும் இணைந்துள்ளனர்.

இதேசமயம், பஸில் நாடு திரும்பியதும் சர்வஜன பலய கட்சியுடன் இணைந்த குழு ஒன்றும் மீண்டும் பெரமுனவில் இணையும் என்றும் கூறப்படுகிறது. (ஐ)

## வடக்கு...

கடல்நீரை நன்னீராக்கும் திட்டம் முன்னெடுக்கப்படுகிறது. வடக்கு மாகாணத்தின் எதிர்கால தேவைகளையும் கருத்தில்கொள்ளும்போது குறிப்பாக, முதலீட்டு வலயங்கள் வடக்கில் ஆரம்பிக்கப்படவுள்ள நிலையில் அவற்றுக்கும் குடிதண்ணீர் தேவை என்பதால் அதையும் கருத்திலெடுக்க வேண்டும்.

அத்துடன், தீவக பிரதேசங்களை சுற்றுலா ரீதியாக அபிவிருத்தி செய்யும்போது அங்கும் குடிதண்ணீருக்கான கேள்வி அதிகரித்துச் செல்லும். அதனை நிவர்த்திக்கும் வகையில் கடல்நீரை நன்னீராக்கும் செயல்பாடுகளை அங்கு அதிகரிக்க வேண்டும் - என்றும் ஆளுநர் கூறினார்.

மேலும், கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்கான பயண நேரம் அதிகம் என்பதால் சுற்றுலாத்துறைக்கு பின்னடைவு இருக்கிறது. வடக்கில் சுற்றுலா துறைக்கான வாய்ப்புகள் அதிகமுள்ள நிலையில் அதனை கூடுதல் அபிவிருத்தி செய்ய வேண்டும். உலக வங்கியும் அது தொடர்பில் கவனம் செலுத்தியுள்ளதையும் ஆசிய அபிவிருத்தி வங்கியின் கவனத்துக்கு ஆளுநர் கொண்டு சென்றார்.

இலங்கைக்கும், ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் இடையிலான தொடர்பு ஏற்பட்டு 60 ஆண்டுகள் அடுத்த ஆண்டுடன் நிறைவடையவுள்ளது என்பதைக் குறிப்பிட்ட ஆசிய அபிவிருத்தி வங்கியின் பிரதிநிதிகள் இலங்கையு டனான தமது உறவுகள் - திட்டங்கள் தொடரும் - என்றனர்.

அத்துடன், தமது எதிர்கால திட்டங்கள் தொடர்பிலும், குறிப்பாக யாழ்ப்பாணத்துக்கான குடிதண்ணீர் திட்டம் எவ்வளவு விரைவாக மக்களை சென்றடைய முடியுமோ அவ்வளவு விரைவாகச் சென்றடைவதற்கு ஏதுவான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும் கூறினர் என்று ஆளுநரின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (ஐ)

# எட்கா உடன்படிக்கையை 3 மாதங்களில் இறுதி செய்க!

## ரணில் விக்கிரமசிங்க அறிக்கை

கொழும்பு, ஏப். 09



இந்தியாவுடனான எட்கா பேச்சுகளை 3 மாதங்களுக்குள் முடிக்க அரசாங்கம் அனைத்து நடவடிக்கைளையும் எடுக்க வேண்டும் என்று முன்னாள் ஜனாதிபதி ரணில் விகிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் ரணில் விக்கிரமசிங்கவின் பணிமனை வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டவை வருமாறு,

அமெரிக்காவின் பரஸ்பர வரிகள் மூலமும் அமெரிக்காவுக்கு எதிராக சீனாவின் பழிவாங்கும் வரிகள் மூலமும் வர்த்தக போர் ஆரம்பித்துள்ளது. முக்கிய பொருளாதார சக்திகள் ஒன்றுக்கொன்று சவால் விடுவது நிச்சயமற்ற காலத்துக்கு வழிவகுக்கும் ஒரு சூழ்நிலையை உருவாக்குகிறது.

உலகளாவிய பொருளாதார சரிவில் அதிகம் பாதிக்கப்படுவது இலங்கை போன்ற சிறிய நாடுகளாகும். ஒன்று அல்லது இரண்டு பொருட்களை ஏற்றுமதி செய்யும் பொருளாதாரங்களை கொண்ட நாடுகளுக்கு அமெரிக்கா முக்கிய சந்தையாக உள்ளது.

பேச்சுகளுக்கு பிறகும், ஏப்ரல் 2ஆம் திகதிக்கு முன்பு இருந்த நிலைக்கு வரிகள் திரும்பாது. இது இலங்கையின் ஏற்றுமதிகளை தடுக்கும். இதன் விளைவாக தொழிற்சாலைகள் மூடல் மற்றும் பெரிய அளவிலான வேலை இழப்புகள் ஏற்படும்.

இந்திய சந்தையை அணுகுவதற்கு இந்தியாவுடனான எட்கா பேச்சுகளை 3 மாதங்களுக்குள் முடிக்க அரசாங்கம் அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டும். மேலும், தாய்லாந்து - இலங்கை சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் உடனடியாக செயல்படுத்தப்பட வேண்டும் - என்றும் கூறப்பட்டுள்ளது.

# 880 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன!

கொழும்பு, ஏப். 09

உள்ளூராராட்சி சபைகளுக்கான தேர்தல் தொடர்பில் நேற்று முன்தினம் வரை 880 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என்று தேர்தல் ஆணைக் குழு தெரிவித்துள்ளது.

இதன்படி, வன்முறை சம்பவங்கள் தொடர்பில் 05 முறைப்பாடுகளும் தேர்தல் சட்டங்களை மீறியமை தொடர்பில் 830 முறைப்பா டுகளும் ஏனைய விடயங்கள் தொடர்பில் 45 முறைப் பாடுகளும் கிடைத்துள்ளன என்றும் தேர்தல் ஆணைக்குழு மேலும் தெரிவித்துள்ளது. (ஐ)

## மக்கள்...

நாமல் ராஜபக்ஷ நேற்று பங்கேற்றார். இதில், தெற்காசிய நாடுகளின் சமகால நகர்வுகள் தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விகளுக்கு பதிலளித்தபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

சமகாலத்தில் உலக நாடுகள் பலவும் வர்த்தகத்துறை சார்ந்த பொதுக் கட்டமைப்புகளிலிருந்து விலகி வருகின்றன. இதற்கு சமாந்தரமாக அரசாங்கங்களுக்கு இடையிலான பரஸ்பர ஒத்துழைப்பு மேலோங்கி வருவதே காரணம். தற்போது இந்திய பிரதமர் நரேந்திர மோடியின் இலங்கை பயணத்தின் பின்னணியில் இரு நாடுகளும் இணைந்து பிராந்திய ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்தலாம்.

அத்துடன், "இலங்கையில் கடந்த காலங்களில் பல்வேறு அரசியல் காரணங்களால் சில முக்கிய அபிவிருத்தி செயல்திட்டங்கள் காலம் தாழ்த்தப்பட்டன. இதன்விளைவாக 2022இல் ஏற்பட்ட எரிபொருள் நெருக்கடி பின்னர் பொருளாதார நெருக்கடியாக விரிவடைந்தது. இவ்வாறான நெருக்கடிகளை எதிர்கொள்வதற்கு இந்து சமுத்திர பிராந்திய நாடுகள் தமக்கிடையில் வலுவான ஒத்துழைப்பை கட்டியெழுப்ப வேண்டியது அவசியம் - என்றார்.

இலங்கையில் இந்தியா, சீன முதலீடுகள் குறித்து எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளித்த நாமல் ராஜபக்ஷ, இவ்விடயத்தில்

"எந்த நாடு" என்ற கோணத்தில் நோக்குவதை விட, எந்த முதலீட்டால் இலங்கை மக்கள் பெரிதும் பயனடைவர் என்ற கோணத்திலேயே நோக்கவேண்டும். இலங்கையில் சீனா அதிக முதலீடுகளைச் செய்திருக்கிறது. இதேவேளை, கடந்த 10 வருட காலத்தில் இந்தியாவே இலங்கையில் அதிகளவில் முதலீடுகளை செய்துள்ளது. எமது நாட்டுக்கு வருகை தரும் சுற்றுலா பயணிகளில் அதிகளவானோர் இந்தியர்களாவர். எனவே, இவ்விடயத்தைப் பொறுத்தமட்டில், அதனை இலங்கை எவ்வாறு அணுகுகிறது என்பதே முக்கியமானதாகும்" - என்றார். (ஐ)

## துப்பாக்கி...

உயிரிழந்தவர் வாகன உதிரிப்பாகங்களை விற்பனை செய்யும் நிலையம் ஒன்றை நடத்தி வருகிறார். நேற்றைய தினம் அவரின் நிலையத்துக்கு சென்ற ஒருவர் அவரை துப்பாக்கியால் சுட்டுவிட்டு அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளார்.

இதில் படுகாயமடைந்த நபர் நீர்கொழும்பு மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

பாதாள உலகக் குழுக்களுக்கு இடையில் ஏற்பட்ட மோதலால் இந்த துப்பாக்கிச் சூடு இடம்பெற்றிருக்கலாம் என பொலிஸார் சந்தேகம் வெளியிட்டனர்.

## எதிர்ப்பின்றி...

பதவியிலிருந்து நீக்குவதற்காக ஒரு விசாரணை குழுவை நியமிக்க வேண்டும் என்று கோரி தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் லக்மாலி ஹேமச்சந்திர நேற்றைய தினம் பிரேரணையை பாராளுமன்றில் சமர்ப்பித்திருந்தார்.

இதனை நிறைவேற்ற வாக்கெடுப்பு கோரப்பட்டது. இதையடுத்து, நடந்த வாக்கெடுப்பில் ஆதரவாக 151 வாக்குகள் கிடைத்தன. ஆளும், எதிர்க்கட்சியினர், தமிழ் அரசு கட்சியினர், அர்ச்சுனா எம். பி என சபையிலிருந்த அனைவரும் ஆதவராக வாக்களித்திருந்தனர். எதிராக எந்த வாக்கும் பதிவாகவில்லை.

இதனைத் தொடர்ந்து பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னகோனை பதவி நீக்கம் செய்வது தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்வதற்கு சிறப்பு குழுவை நியமிக்கும் தீர்மானம் பெரும்பான்மை ஆதரவுடன் நிறைவேற்றப்பட்டது என்று பிரதி சபாநாயகர் ரிஸ்வி சாலி சபைக்கு அறிவித்தார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# அமெரிக்காவின் புதிய வரி ட்ரம்புக்கு ஜனாதிபதி கடிதம்!

## சபையில் கூறினார் பிரதி அமைச்சர்


கொழும்பு, ஏப். 09

**அமெரிக்க அரசாங்கத்தின் புதிய வரிகள் தொடர்பில் ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க அமெரிக்க ஜனாதிபதிக்கு கடிதமொன்றை அனுப்பிவைத்துள்ளார் என்று பொருளாதார அபிவிருத்தி விவகாரங்களிற்கான பிரதியமைச்சர் அனில் ஜயந்த நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.**

ஜனாதிபதியின் கடிதம் கிடைத்துள்ளதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது.

புதிய வரித்திருத்தத்தால் எழுந்துள்ள சிக்கல்களை தீர்க்கக் கூடிய வழிமுறைகள், அரசாங்கம் என்ற அடிப்படையில் எடுக்கக் கூடிய நடவடிக்கைகள் மற்றும் இந்த வரியைக் குறைப்பதற்கான பேச்சுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறும் அந்தக் கடிதத்தில் ஜனாதிபதி கோரிக்கை விடுத்துள்ளார்.

அத்துடன், அமெரிக்காவுடனான வர்த்தக நிலுவையை குறைப்பது குறித்து அரசாங்கம் கவனம் செலுத்தி வருவதாக தெரிவித்துள்ள அவர், கடந்த ஐந்து வருட தரவுகள் அமெரிக்காவுடனான வர்த்தக நிலுவை அதிகரித்துள்ளதை வெளிப்படுத்தியுள்ளன - என்றும் பிரதியமைச்சர் குறிப்பிட்டார். (ஐ)



## கொழும்பு பங்கு சந்தை நேற்று மீட்சியடைந்தது

கொழும்பு, ஏப். 09

கொழும்பு பங்குச் சந்தையின் அனைத்து பங்கு விலைச் சுட்டெண் நேற்றைய வர்த்தக நாள் நிறைவில் கணிசமான மீட்சியை பதிவு செய்துள்ளது.

இதன்படி, அனைத்து பங்கு விலைச் சுட்டெண் 467.26 புள்ளிகள் உயர்ந்து, 15,127.71 புள்ளிகளை பதிவு செய்துள்ளது. இது முந்தைய நாள் முடிவைவிட குறிப்பிடத்தக்க உயர்வை காட்டுகிறது.

நேற்றைய வர்த்தக நாள் நிறைவில் பங்குச் சந்தையின் மொத்த புரள்வு 289 கோடி ரூபாயாக பதிவாகியுள்ளதாக கொழும்பு பங்குச் சந்தை குறிப்பிட்டுள்ளது.

கடந்த மூன்று நாட்களில் மட்டும், பங்குச் சந்தை வீழ்ச்சியால் கொழும்பு பங்குச் சந்தை மற்றும் சந்தை மூலதனம் 43 ஆயிரத்து 500 கோடி ரூபாய் குறைந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## விடுதியில் தங்கியிருந்தவர்களிடம் கொள்ளையிட்ட பெண்கள் கைது!

### ஒருவர் 15 வயது சிறுமி

கொழும்பு, ஏப். 09

விடுதி ஒன்றுக்குள் புகுந்த 5 பெண்கள் கொண்ட குழுவை கொட்டாஞ்சேனை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கொழும்பு, கொட்டாஞ்சேனையில் விடுதி ஒன்றில் தங்கியிருந்த ஜோடியின் அறைக்குள் புகுந்த கும்பல் அவர்களை மிரட்டி கைபேசி, பணம் என்பவற்றை கொள்ளையிட்டனர்.

இது தொடர்பில் பொலிஸாருக்கு கிடைத்த தகவலையடுத்து, சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டனர்.

கைதானவர்களில் 15 வயது சிறுமியும் அடங்குவார். ஏனையோர், 25, 33, 52, 54 வயதுடையவர்களாவர். (ஐ)

## சட்டவிரோத மீன்பிடி முல்லையில் 8 பேர் கைது!

முல்லைத்தீவு, ஏப். 09

முல்லைத்தீவு கடலில் சட்டவிரோத தொழிலில் ஈடுபட்ட 8 பேரை விளக்கமறியலில் வைக்க முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

முல்லைத்தீவில் சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கை அதிகரித்துள்ளதாக குற்றச்சாட்டுகள் எழுந்தன. இந்த நிலையில் கடந்த 2 நாட்கள் முன்னெடுத்த நடவடிக்கையில் சட்டவிரோத தொழிலில் ஈடுபட்ட 8 பேர் கைது செய்யப்பட்டனர். இவர்களில் 6 பேர் ஞாயிற்றுக்கிழமையும் 2 பேர் நேற்று திங்கட்கிழமையும் கைது செய்யப்பட்டனர்.

இவர்களில் முன்னர் கைதான 6 பேரையும் நாளை வரையும், பிறகு கைதான 2 பேரையும் எதிர்வரும் 16ஆம் திகதி வரையிலும் விளக்கமறியலில் வைக்க முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டது. (ஐ)

## வியாழேந்திரன் பிணையில் விடுவிப்பு

கொழும்பு, ஏப். 09

வர்த்தகர் ஒருவரிடமிருந்து 15 இலட்சம் ரூபாய் இலஞ்சம் பெற உதவி செய்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு விளக்க மறியலில் வைக்கப் பட்டுள்ள முன்னாள் இராஜாங்க அமைச்சர் எஸ். வியாழேந்திரனுக்கு நேற்று பிணை வழங்கப்பட்டது.



10 இலட்சம் ரூபாய் பெறுமதியான 5 சரீர பிணைகள் மற்றும் 50 ஆயிரம் ரூபாய் ரொக்க பிணையில் அவரை விடுவிக்க கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றம் அனுமதிய ளித்தது.இலஞ்சம் பெற உதவிய குற்றச்சாட்டில் வியா ழேந்தரனை இலஞ்ச ஊழல் ஆணைக்குழு அதிகாரிகள் கடந்த மார்ச் மாதம் 25 ஆம் திகதி கைது செய்திருந்த னர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## தனியார் சம்பள உயர்வு அமைச்சரவை அனுமதி!

கொழும்பு, ஏப். 09

தனியார் துறையினரின் சம்பளத்தை திருத்துவதற்கு அமைச்சரவை அனுமதியளித்துள்ளது.

2025ஆம் ஆண்டு வரவு - செலவு திட்ட யோசனையில் அரச ஊழியர்களின் சம்பள உயர்வுக்கு இணையாக, தனியார் துறை ஊழியர்களின் சம்பளத்தையும் உயர்த்துவதற்கு முன்மொழியப்பட்டிருந்தது.

இதன்படி, தேசிய குறைந்தபட்ச மாதாந்திர சம்பளம் மற்றும் தேசிய குறைந்தபட்ச நாளாந்த சம்பளத்தை திருத்துவதற்கும், அதனுடன் தொடர்புடைய ஏனைய சட்ட நடவடிக்கைகளை பின்பற்றுவதற்கும் தொழில் அமைச்சர் முன்வைத்த முன்மொழிவுக்கு அமைச்சரவையின் அனுமதி கிடைத்துள்ளது.

2025 ஏப்ரல் 01 முதல் நடைமுறைக்கு வரும் வகையில், தேசிய குறைந்தபட்ச மாதாந்திர சம்பளம் 17 ஆயிரத்து 500 ரூபாயிலிருந்து 27 ஆயிரம் ரூபாயாக 9 ஆயிரத்து 500 ரூபாயால் உயர்த்தப்படும். குறைந்தபட்ச நாளாந்த சம்பளம் 700 ரூபாயிலிருந்து ஆயிரத்து 80 ரூபாயாக 380 ரூபாயால் உயர்த்தப்படும்.

2026 ஜனவரி 01 முதல் நடைமுறைக்கு வரும் வகையில், தேசிய குறைந்தபட்ச மாதாந்திர சம்பளம் 27 ஆயிரம் ரூபாயிலிருந்து 30 ஆயிரம் ரூபாயாக 3 ஆயிரம் ரூபாயால் உயர்த்தப்படும். 2026 ஜனவரி 01 முதல் நடைமுறைக்கு வரும் வகையில், தேசிய குறைந்தபட்ச நாளாந்த சம்பளம் ஆயிரத்து 80 ரூபாயிலிருந்து 1,200 ரூபாயாக 120 ரூபாயால் உயர்த்தப்படும். (ஐ)

## இ. போ. ச. திட்டமிட்டு சேதப்படுத்தப்பட்டது

### அமைச்சர் பிமல் குற்றச்சாட்டு



கொழும்பு, ஏப். 09

பல ஆண்டுகளாக இலங்கை போக்குவரத்து சபை திட்டமிட்ட சேதத்துக்கு உள்ளாகியுள்ளது. இ. போ. சவின் 109 சாலைகளில் 55 சாலைகள் நட்டத்தில் இயங்குகின்றன என்று போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.

நேற்று பாராளு மன்றத்தில் உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

"இந்த நடவடிக்கைக்குப் பின்னால் இந்த விடயத்தில் பொறுப்பேற்ற முன்னாள் அமைச்சர்கள் உட்பட அரசியல்வாதிகள் உள்ளனர்," என்று அவர் குற்றம் சாட்டினார்.

பாராளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்த்தன எழுப்பிய வாய்மொழி கேள்விக்கு பதிலளித்த அமைச்சர், இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான ஆயிரத்து 955 பேருந்துகள் சேவையில் இல்லை என்றும், பல்வேறு முறைகேடுகளைச் செய்ததற்காக சுமார் ஆயிரம் சாரதிகள், நடத்துனர்கள் பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளனர் என்றும் அவர் கூறினார். (ஐ)

## இ- தேசிய அடையாள அட்டை கொள்வனவுக்கு அங்கீகாரம்!

கொழும்பு, ஏப். 09

இலத்திரனியல் அடையாள அட்டைகளை கொள்வனவு செய்வதற்கு அமைச்சரவை அனுமதி அளித்துள்ளது.

தொடர்ந்து வரும் காலங்களில் நடைமுறைப்படுத்தப்படவுள்ள இலத்திரனியல் தேசிய அடையாள அட்டை வழங்கும் வேலைத்திட்டத்தின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள புதிய முறைமையின் கீழ் 15 வயது பூர்த்தியடைந்தவர்கள் அனைவருக்கும் இலத்திரனியல் தேசிய அடையாள அட்டை வழங்க வேண்டியுள்ளது.

இலங்கை பிரஜைகள் மீண்டும் பதிவு செய்து அடையாள அட்டைகளை வழங்குவதற்காக 1. 7 கோடி இலத்திரனியல் அடையாள அட்டைகள் தேவைப்படுகின்றமை கண்டறியப்பட்டுள்ளது.

அதற்கிணங்க, குறித்த தேவையைப் பூர்த்தி செய்வதற்காக சர்வதேச கேள்வி கோரல் முறையில் 1.5 கோடி அச்சிடப்பட்ட பொலிகாபனேற் அட்டைகளைக் கொள்வனவு செய்வதற்காக டிஜிற்றல் பொருளாதார அமைச்சராக ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (ஐ)

## மட்டக்களப்பில் அதிக வெப்பம் உயிரிழப்பு ஏற்படவும் வாய்ப்பு!

### மருத்துவர் முரளீஸ்வரன் எச்சரிக்கை

மட்டக்களப்பு, ஏப். 09

மட்டக்களப்பு மாவட்டத்தில் அதிக வெப்பமான வானிலை காணப்படுவதனால் சிறுவர்களுக்கு இதய நோய்கள், மயக்கம், உயிரிழப்புக்கள்கூட ஏற்பட வாய்ப்பு உண்டு. பொதுமக்கள், சிறுவர்கள் வெப்பத்திலிருந்து பாதுகாத்துக் கொள்ள அதிக அக்கறையுடன் செயல்பட வேண்டும் என்று மாவட்ட பிராந்திய சுகாதாரசேவைகள் திணைக்கள பணிப்பாளர் மருத்துவர் இரா.முரளீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பில் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் தற்போது அதிக வெப்பமான வானிலை காணப்படுவதனால் பொதுமக்கள் மேலதிகமான உடற்பயிற்சிகள் விளையாட்டு நிகழ்வுகளிலோ உரியமுறையில் ஒழுங்குபடுத்தப்படாத களியாட்ட நிகழ்வுகள் தவிர்த்துக் கொள்வதோடு போதுமான அளவு தண்ணீர் அருந்த வேண்டும்.

இந்த அதிக வெப்ப தாக்கத்திலிருந்து பொதுமக்கள் பாதுகாத்துக் கொள்ள தேவையான நடவடிக்கைகளை எடுப்பதோடு தேவையற்ற விதத்தில் நண்பகல் வேலைகளில் நடமாடுவதை குறைத்துக் கொள்ள வேண்டும்.

இதன் மூலம் ஏற்படுகின்ற உயிரிழப்புகள் இதன் பாதிப்புகளில் இருந்து மக்களைப் பாதுகாத்துக் கொள்ள முடியும். கூடுதலாக சிறுவர்கள் விடயத்தில் அதிக அக்கறையுடன் செயல்பட வேண்டும். இவ்வாறான காலகட்டங்களில் விளையாட்டுப் போட்டிகளில் பங்கு பற்றுவதை தவிர்க்க வேண்டும்.

வயதானவர்கள் தேவையற்ற உடலை வருத்துகின்ற செயல்பாடுகளை தவிர்க்க வேண்டும். எனவே பொது மக்கள் தேவையான பாதுகாப்பு நடவடிக்கைகளை முன்னெடுப்பதன் மூலம் பாதிப்புகளில் இருந்து தப்ப முடியும் - என்றார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 09.04.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.